

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் 81 | இதழ் 11 - 12

ஏவிளம்பி ஆு ஐப்பசி - கார்த்திகை (2017 நவம்பர் - டிசெம்பர்)





திருச்சிற்றம்பலம்

**துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி**
**மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேல்**
**பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்**
**டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே.**

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்





**பொழிப்புரை:**

திருத்துருத்தியில் எழுந்தருளிய இறைவனே! பகலில் யோகியாய்த் திருத்துருத்தியிலும், இரவில் மணவாளக் கோலத்தோடு வேள்விக் குடியிலும் எழுந்தருளியுள்ள நீ, துறக்கும் உபாயத்தைக் கூறினீர் இல்லை. அழகிய திருவடியின்பத்தில் திளைத்து அதனை மறவாதிருந்த என்னை மயக்குறுத்திடும் மண்ணுலகில் பிறக்குமாறும், நோய்க்கு இடமான இவ்வுடம்பை விடுத்து இறக்குமாறும் செய்தருளினாய். யான் உனக்குச் செய்த இழுக்கு யாதோ? சொல் வாயாக.

சிவதொண்டன் நிலையம் - யாழ்பாணம்

சிவதொண்டன் நிலையம் – யாழ்ப்பாணம்

உ
சிவமயம்

# அறிக்கை

| பொருள் | காலம் | நாள் | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| யாகம் | 05.11.2017<br>03.12.2017 | ஞாயிறு<br>ஞாயிறு | காலை 8.00 மணிமுதல் | சிவதொண்டன் நிலையம்<br>யாழ்ப்பாணம் |
| ஆயிலியம் | 11.11.2017<br>08.12.2017 | சனி<br>ஞாயிறு | நண்பகல் | யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம்<br>கொழும்புத்துறை |
| | | | பிற்பகல் | செங்கலடி சிவதொண்டன் நிலையம் |

**ஆண்டு விழா :** எதிர்வரும் 4.11.2017 ஆம் நாள் யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலைய ஆண்டுவிழா நாள் ஆகும். அன்று மாலை 3.30 மணிமுதல் திருவடிக்குத் திவ்வியமான அபிடேக ஆராதனைகள் இடம்பெறும்.

## பொருளடக்கம்

**விடயம்** **பக்கம்**


1) குருநாதன் அருள்வாசகம் 01

2) கீதை வழங்கும் யோக தரிசனம் 02

3) திருவாசகம் 06

4) ஆட்கொள்ளும் வித்தகர் 08

5) அவனின்றி ஓர் அணுவும் அசையாது 11

6) பெரியபுராணமும் சைவசித்தாந்தக் கொள்கைகளும் 12

7) சுவாமிகள் மகத்தான நிலையை வெளிப்படுத்தும் எங்கள் ஆசான் அருள்மொழிகள் 14

8) எள்ளத்தனையும் மறவாது ஏத்துதல் 16

9) இறையருள் 18

10) மறவாதவன் (ஆசிரியர்) 19

11) நற்சிந்தனை 20

12)) Natchinthanai 22

13) Thiruvasakam 23

14) The Amritanubhava 25

# சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 81 ஏவிளம்பி ஆடு ஐப்பசி - கார்த்திகை (2017 நவம்பர் - டிசெம்பர்) இதழ் : 11 - 12


உ
சிவமயம்

## குருநாதன் அருள்வாசகம்

### ஒரு குறைவுமில்லை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே
ஆகையால் நாம் அருடைய உடைமை
அவருடைய அடிமை
நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே
நாம் அவரை ஒரு போதும் மறந்திருக்க முடியாது

நமக்கு ஒரு குறைவுமில்லை
நாம் என்று முள்ளோம்
எங்கும் இருக்கிறோம்
எல்லா மறிவோம்

இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவதை அடைவோமாக.

"சந்ததமு மெனதுசெயல் நினதுசெயல் யானெனுந் தன்மை
நினையன்றி யில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமரச சுபாவமிதுவே"

என்னுந் தாயுமானவர் அருமைத்திருவாக்கே இதற்குப் போதிய சான்று

### சிவயோகம் பாவனை

தெய்வத்தை நம்பு, முழுமனத்தோடு நம்பு; உலகில் உனக்கியதெனத் தோன்றும் எவற்றிலும் இனியதாக நினை. அதைவிட வேறில்லை என்று நினை, இருக்கும்போதும் நிற்கும்போதும், நடக்கும்போதும், கிடக்கும்போதும் நினை. உனது நரம்பிலும் தசையிலும் இரத்தத்திலுந் தெய்வமென்னும் நினைவே நிறைவதாக. நானில்லை, கடவுளே இருக்கிறாரென எண்ணு. கடவுகைளக் கும்பிடுதலே வாழ்வின் இலக்காக வைத்துக்கொள். எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான். கடவுளை உனது உள்ளத்தில் வைத்து வளர்ப்பாயாக. எல்லாம் அவருடைய செயலாகுக. ஈற்றில் எல்லாம் அவனாகவே காணப்படும்.

நற்சிந்தனை

# கீதை வழங்கும் யோக தரிசனம் (தொடர்ச்சி)
## அத்தியாயம் - 2
## சாங்கிய யோகம்

### 2.19 சாங்கியமும் ஏனை யோகங்களும்

கீதையின் சாங்கிய யோகத்தை அறிவினால் பெறும் யோகம் அல்லது ஞானயோகம் என ஆதிசங்கரர் விளக்குவார். அக்காலத்தில் இருந்த ஏனைய யோக முறைகள் யாவும் ஏதோவகையில் ஒருபக்கச் சார்புடையனவாகவே இருந்தன. கீதையில் கிருஷ்ண பரமாத்மா அவற்றைத் திருத்தி அமைக்கின்ற வேலையில்தான் தனது சாங்கிய யோகத்தை அமைத்து விளக்குகின்றார். கீதையின் முதல் ஆறு அத்தியாயங்களிலும் அக்காலத்தில் நிலவிய பல்வேறு யோக முறைகளையும் எடுத்து விளக்கி அவற்றிலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்து தனது சாங்கிய யோகத்தை முன்வைக்கின்றார்.

### 2.20 ஆரம்பக்காட்சியும் சாங்கியமும்

இந்நூலின் இந்த இரண்டாம் அத்தியாயத்தில் சாங்கிய யோகம் அல்லது ஞானயோகப் பாதை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றது. என்றும் உள்ள உண்மையை ஓரளவு உணரும் இந்நிலையில் சீடனுக்கு அந்த உண்மை பற்றிய தத்துவங்கள் அடங்கிய முறையொன்று தேவைப்படுகின்றது. ஏனெனில், அவ்வாறான முறையால் சீடன் தனது புலக்காட்சியில் கண்ட ஆரம்ப அறிவைப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எனினும் அவ்வாறான ஒரு முறையைப் பூரணமாக அந்த இடத்தில் விளக்குவதிலும் ஓர் ஆபத்தும் உள்ளது. ஏனெனில், அனுபவத்தில் கண்ட புலக்காட்சியின் இடத்தை வெறும் கோட்பாட்டு அமைப்பு முறை விழுங்கிவிடக்கூடும். சீடன் செல்ல வேண்டிய பாதையில் மேற்கொள்ளவேண்டிய செயலையும், கடைப்பிடிக்க வேண்டிய அன்பையும் கூட அப்பூரண கோட்பாட்டு முறை இல்லாமல் செய்து விடக்கூடிய ஆபத்தும் அங்கே உண்டு.

### 2.21 உண்மை பற்றிய நூலறிவு மங்கி மறையும்

உபநிடதங்களை வாசிக்கும் ஒருவர் கூட உண்மையான ஆன்மாவினது உள்ளுணர்வின் ஒரு சிறிய அளவை அனுபவிக்கக்கூடும். ஆதிசங்கரரின் உபநிடத விளக்கங்களை வாசிக்கும் பலர் தாம் பெறும் அந்த உள்ளுணர்வைச் சிறிது காலத்திலேயே மறைந்துபோக விட்டு விடுகிறார்கள். சங்கரர் தனது உபநிடதங்கள் பற்றிய விளக்கத்தின் மையமாக அந்த உள்ளுணர்வைப் பெறுவதனையே அமைத்துக்கொண்டார். அதனை வாசிக்கும் சீடன் உண்மையான அனுபவத்தைக் கைவிட்டு விட்டு வெறும் நூலறிவையே சேகரித்து வைத்திருப்பவனாக மாறிவிடுகின்றான்.

### 2.22 சீடனின் பாதையில் அந்த அறிவும் தேவை

சீடன் சாங்கிய ஞானத்தை அறிந்து, தான் விரும்பும் தெளிவான நூலறிவை மட்டுமே பெறலாம் என்பதை மறக்கக்கூடாது. உண்மை அனுபவ அறிவின் ஒரு பதிலீடு அல்லது குறியீடே சாங்கிய நூல் அறிவு ஆகும். சீடன் தான் மேலும் விரைவாக அனுபவ அறிவில் முன்னேறுவதற்கு அச்சாங்கிய நூலறிவைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதில் தவறில்லை.

### 2.23 உண்மை இயல்பாகவே மலரும்

கபிலரின் சாங்கியம் ஒருபக்கச்சார்பு உடையது. அதில் தனது அகக்காட்சி மங்கி மறையும் போது அதனை மீட்டு எடுப்பதற்காக மிகக் கடுமையான முயற்சியை வாழ்க்கையில் வலிந்து மேற்கொள்வான். அதனால் அவன் தன்னைச் செயல், உணர்வு என்பவற்றில் இருந்தும் மேலும் மேலும் விலக்கிக்கொள்வான். அதன் விளைவாக அவன் அருவமான நூலறிவுக்குள் தனது இயல்பு நிலையை இழக்கும் ஒரு வாழ்வினை வலிந்து பெற்றுக்கொள்வான். அந்த வாழ்க்கை அவனிடம் உள்ள இயல்பான சமநிலையை இழக்கச் செய்து விடுகிறது. சமநிலையற்ற வாழ்வு இயல்பான வாழ்வு அன்று. பூரண சமநிலையில் உள்ளதும் இணக்கமானதும் ஆன வாழ்விலேயே ஆன்ம உணர்வு மலருகின்றது. வலிந்ததும் இயல்புக்கு மாறானதுமான கடின முயற்சியால் அதனை மலரச்செய்ய முடியாது. எந்த இயல்பற்ற கடின முயற்சியினாலும் உண்மை இலக்கைச் சீடனால் அடையமுடியாது. இந்து மரபில் பிரமச்சரியம் என அழைக்கப்படும் நிலையை ஒறிகன் என்பவன் தனது ஆண்மையை விதை நீக்கம் செய்ததன் மூலம் அடைய முடியவில்லை. மலைக்குகை ஒன்றில் சீடன்

தன்னைத் தனிமைப்படுத்துவது கூட உள்ளத்துறவைக் கொண்டுவரும் என்பதற்கு உறுதியில்லை. ஆனால், மாறிச்செல்லும் உலகில் இருந்து நீங்கும் உள்ளத்துறவு மட்டுமே உண்மை ஞானம் மலருவதற்குத் தகுந்த அடிப் படை ஆகும்.

### 2.24 புத்தி யோகம்

வாழ்க்கைப் போராட்டத்தில் இருந்து தப்பி ஓடாமல் அதனை வெற்றிகொள்ள வேண்டும். தன்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள மீண்டும் மீண்டும் இடம் அளிக்காமல் இங்கு சீடனுக்கு எல்லாவற்றிற்கும் மேலான புத்தி யோகம் புகட்டப்படுகிறது. கபில சாங்கியத்தில் உள்ள நிலைத்த பகுப்பாய்வு முறையைத் தவிர்ப்பதற்குப் புத்தியோகம் அவசியம் தேவைப் படுகிறது. கபில சாங்கியத்தின் படி, கைவல்யம் பெறும் முயற்சி சீடன் தன்னைத் தோற்றத்துக்கு வந்துள்ள பிரபஞ்சம் முழுவதில் இருந்தும் தனிமைப்படுத்துவ தனால் மேற்கொள்ளப்படுகிறது. அம் முயற்சி சாதக மாக இருந்தாலும் கூட இயல்பற்றது ஆகவே இருக்கும். உண்மையாகப் பின்பற்ற வேண்டிய பாதை உயர்ந்த உண்மையோடு படிப்படியாகத் தன்னை ஐக்கியப்படுத் துவதன் மூலம் கீழ்நிலையிலுள்ள தோற்றங்களில் இருந்து விடுபடுவதே ஆகும். ஆனால் கபில சாங்கியம் மலரின் இயல்பான மலர்ச்சியை விடுத்து அதன் மொட்டை வலிந்து மலரப்பண்ணுவதாகவே இருக் கிறது.

### 2.25 புத்தி யோகம் முதற் படி

புத்தியோடு ஐக்கியமாகும் புத்தியோகமே நடை முறைச் சாங்கியத்தில் அழுத்திக் கூறப்படும் விடயமாக உள்ளது. எல்லாவற்றையும் கடந்த நிலை ஆகிய குறிக்கோளை அடைய அந்தப் புத்தியோகம் அடிப்ப டையாக அமைகிறது. புத்தியோகத்தில் மனம் இயங் காது நின்று விடவேண்டும். சீடன் தான் செல்ல வேண்டிய பாதையைப் பற்றிப் பேசிக்கொண்டு இருக்காமல் அதில் நடைபோட வேண்டுமாயின் அவன் புலன்களோடு ஐக்கியப்படுவதை விடுத்து அவற்றுக்கும் மேலான புத்தியோடு ஐக்கியப்பட வேண்டும். அந்தவழியில் அவன் செல்வானாயின் அவனது முயற்சி சற்றும் வீண் போகாது. அவனது முயற்சியாவும் இறுதி இலக்கைத் தாண்டும் வேளை மட்டும் சேமித்து வைக்கப்படும்.

### 2.26 நிச்சய ஆத்ம புத்தி

புத்தியின் தன்மை பற்றிக் கபில சாங்கியம் கோட் பாட்டு ரீதியான சிறந்த விளக்கம் தருகிறது. அவ் வாறான விளக்கத்தை வேறெங்கும் காண முடியாது. கபில சாங்கியம் அக அறிவுக் கருவிகளில் ஒன்று புத்தி என எளிமையாக விளக்குகின்றது. ஒரு குறிப்பிட்ட காலம் வரை மனம் சந்தேகமும் தயக்கமும் உடையதாக இருக்கும். அதன்பின் தீர்மானம் எடுத்து முடிவு செய்யும் நிலைக்கு வருகின்ற ஆற்றலைப் புத்தி என அழைக்கப்படுகிறது. தீர்மான ஆற்றலைத் தரும் விவேக ஆற்றலே புத்தி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் நிச்சய ஆத்ம புத்தி என்பது வெறும் விவேகக் கூற்றுக்களின் ஒரு தொகுதியாக இல்லாமல் உயிர்த்து டிப்புள்ள ஒரு முடிபான அறிவைத் தருகிறது. அந்த வகையில் அப்புத்தியினை உள்ளுணர்வு எனலாம். அந்த உள்ளுணர்வு விட்டு விட்டு ஜொலிப்பதாக இல்லாமல் என்றும் உறுதியாக நின்று பிரகாசிக்கின்றது. கட உபநிடதத்தில் புத்தியை ஞான ஆத்மா என்று குறிப் பிடப்பெற்றிருக்கின்றது. அந்த உள்ளுணர்வு வரும் வேளையில் அதே ஆன்ம அறிவாகின்றது. அப்படியான ஒரு ஆற்றலினாலேயே ஆன்ம அறிவு பெறப்படுகின் றது. அது குறியீட்டு ரீதியாக மஞ்சல் ஆடையால் குறிப்பிடப்படுகிறது. அவ்வாறான மஞ்சல் ஆடை யையே கிருஷ்ணர் அணிந்துள்ளார். சீடனுக்கு அப்புத்தி அவனது ஆளுமைக்கு அப்பால் உள்ளதனால் மிக முக்கியம் உடையதாக ஆகின்றது.

### 2.27 மனமும் புத்தியும்

மனத்தின் மட்டத்தில் ஆன்ம ஒளி பல தனிப்பட்ட விடயங்களாகப் பிரிந்துவிடுகின்றது. அவை ஒவ்வொன் றுமே தமக்கென ஒரு தனித்தன்மையை உடையனவாக இருக்கின்றன. ஆனால், புத்தி அவ்வாறு தனித்தன்மை உடையதாக இல்லாமல் முழு ஆன்ம ஒளியையும் ஒன்றாக்கி விடுகின்றது.

### 2.28 ஆத்ம புத்தியின் குணம் சத்வம்

நிச்சய ஆத்ம புத்தி சாதாரண மனிதனிடமுள்ள அலைந்து கொண்டிருக்கும் உறுதியற்ற எண்ணங்களில் இருந்து முற்றும் மாறுபட்டது. அது எல்லா உண்மை அறிவுக்கும் மூலமானது. அந்தப் புத்தி கைவரப்பெற் றவனுக்கு ஆன்மிக நூல்கள் எல்லாம் மேலோட்டமா னவை என்றே தோன்றும். எனினும் ஆன்மிக நூல்கள் தமக்கே உரிய ஒரு பெறுமதி உடையன என்பதற்கு

மறுப்பில்லை. என்றும் உள்ள உண்மை கிரியைகள் விழாக்களுக்குள் மறைந்துள்ளது. ஆனால் ஆன்மிக நூல்களே பெரும்பாலான மனிதர்களுக்கு வழிகாட்டுவனவாக உள்ளன. அவை ஆசைகள் நிறைந்த மனிதர்களுக்குப் பயனுள்ளவையே. ஆனால் அறிவு தேடும் சீடனுக்கு அவை அவ்வளவு முக்கியம் அற்றன. கீதை "மூன்று குணங்களைப் பற்றி வேதங்கள் கூறுகின்றன" என்கிறது. ஆனால் சீடன் சத்வ குணத்திலேயே நிலைத்து நிற்றல் வேண்டும். இராசத தாமச குணங்கள் நம்பிக்கை, பயன் என்பவற்றோடு இருப்பதால் சீடன் அவற்றைக் கடக்க வேண்டியவன் ஆகிறான். எனவே அவற்றைக் கடக்கும் பாதையில் செல்லும் சீடன் சத்வ குணம் உடையவனாக இருக்க வேண்டும். அந்தச் சீடனுக்கு ஆன்மிக நூல்கள் "எங்கும் நீர்நிரப்பி வழிகின்ற போது அங்கு உள்ள நீர்த்தேக்கத்தை ஒக்கும்" என்கிறது கீதை. புத்தி யோகத்தை அடைந்தவன் இதய முடிச்சுக்களில் இருந்து விடுதலை பெறுகிறான். அந்த இருதய முடிச்சுக்கள் என்ற கட்டுக்களே சீடனைத் தனித்தவன் என்ற சிறையுள் வைக்கின்றது. ஆனால், அவனது ஆன்மாவுக்கு அவ்வாறான தனிப்பட்ட ஆளுமைகள் இல்லை. "மயக்கம் என்ற சிக்கலில் இருந்து விடுபடவும் வாழ்வின் இன்ப துன்பங்களினால் நிலை குலையாமல் அசையாது நிற்கவும்" உண்மை பற்றிய பிணக்குகள் நிறைந்த பகுதிநோக்குகளில் இருந்து விடுபடவும் புத்தியை அடைந்தால் மட்டுமே சீடனுக்குச் சாத்தியமாகும். அவ்வாறு அவன் புத்தியை அடையாவிட்டால் மனத்தினது இன்பதுன்ப மயக்கங்களும், பிணக்குகள் நிறைந்த பகுதி நோக்குகளுமே எஞ்சும்.

### 2.29 செயலில் தேர்ச்சி

புத்தியில் நிலைபெற்றவன் துக்க நிலையைக் கடக்கும் இறுதி நிலையை அடைகின்றான். அப்புத்தியில் நிலைபெறுவதற்கான வழி செயலில் தேர்ச்சி பெறுவதாகும். செயலில் தேர்ச்சி என்பது சமநிலையான மனப்பாங்கைப் பேணுவதாகும். சமநிலை மனப்பான்மை என்பது வெற்றி தோல்விகளில் சம மனபாங்கு உடையதாய் இருப்பதாகும். எனவே சீடன் தனது கடமைகள் எல்லாவற்றையும் செய்தும் அவற்றால் வரும் பலன்களில் பற்றில்லாதவனாக இருக்க வேண்டும். இவ்வழியில் சீடன் செல்லுவதற்கு வழிகாட்டுவதே புத்தி ஆகும். அந்தப் புத்தி சீடன் ஒருவனுக்கு மட்டும் உரியதாக இல்லாமல் சுய நன்மை தீமைகளைக் கடந்த பரந்த ஒரு விடயமாகும்.

### 2.30 கர்ம யோகம்

புத்தியைச் சார்ந்து கடமை செய்வதே, கர்ம யோகம் ஆகும். மூன்றாம் அத்தியாயம் கர்மயோகத்தை விரிவாக விளக்க உள்ளது. எனவே, இங்கு ஆசையால் உந்தப்பட்ட செயல்களை விட்டுப் புத்தியில் நிலை பெற்றுத் தெய்வ ஞானம் மலரச் சீடன் தன்னைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும் என்பதை அறிந்து கொண்டாலே போதுமானது. அந்தப் புத்தியினால் மட்டுமே தெய்வ ஞானம் தானாகவே பிரகாசிக்கும். அப்புத்தியில் நிலைபெறாவிட்டால் தெய்விக ஞானம் தடைப்படுத்தப்பட்டுப் பல கூறுகளாகவே தோன்றும். புத்தியில் நிலைபெற அவையாவும் ஒன்றாகி இருமைகள் யாவும் மறைந்து தெய்வஞானம் தானாகவே வெளிவரும்.

### 2.31 உயர் ஆன்மக்காட்சி

மனத்தைப் புத்தியுடன் இணைக்க வேண்டும் என்று கூறுவது இலகுவானது. ஆனால் சீடனைப் பொறுத்த வரையில் அவ்வார்த்தைகளில் எதுவித அர்த்தமும் இல்லை. அவனுக்குப் புத்தி என்றால் உண்மையில் என்ன என்பதனை அனுபவத்தில் அறியமுடியாத நிலையே இருக்கும். மேலும் மனம் தான் புத்தியோடு ஒன்றுபட இடமளிக்காது தனித்து நிற்கவே அடம் பிடிக்கும். எனவே மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற சாங்கியக் கோட்பாட்டினால் எதுவித பயனுமில்லை. புத்தியில் நிலைபெற்றவனது பண்புகளைப் பற்றி அர்ச்சுனன் கிருஷ்ணனிடம் வினவிய போது கிருஷ்ணன் ஆமை தனது அவயவங்களை உள்ளே இழுத்துக் கொள்வது போலப் புலன்களின் வழியில் செல்லாது அவன் தனக்கு உள்ளே இருக்கும் உண்மையோடு இணைந்து கொள்ளவேண்டும் என்பதைப் பதிலாகக் கூறுகிறான். வெறுமனே புலன் வழிச் செல்லாதிருத்தல் மட்டும் போதாது. ஏனெனில் புலனை அடக்கப் பயில்பவன் அதில் வலிமை இழந்து விடுகின்றான். அப்படி அடக்கினாலும் ஆசைகள் அவனது இதயத்தில் மறைந்து இருக்கும். அதனையும் வெல்வதற்கான வழி புத்தியைப் புலன்வாழ்வில் செலுத்தாது அதனிலும் உயர்ந்த ஆன்மக்காட்சியுடன் இணைக்க வேண்டும்.

### 2.32 ஆன்ம முன்னேற்றம்

ஆசைகளை முற்றாக அறுப்பதற்கான வழி ஆன்மக் காட்சியைப் பெறுவதே ஆகும். இதனாலேயே

புலன்களைக் கட்டுப்படுத்துவதோடு நில்லாமல் அதுவரை தோன்றாதிருந்தாலும் அவன் தனது ஆத்ம மையத்தில் நிலைகொள்ள வேண்டும் என அறிவுறுத்தப் படுகின்றான். "உனது எண்ணங்களை அமைதிப்படுத்தி நீ உணரும் உனது குருவிடம் கவனத்தை நிறுத்து" எனவும் அவன் அறிவுறுத்தப்படுகின்றான். புலன்களை மட்டும் அடக்கப் புகுந்தால் அவை மேலும் தீவிரமாகிச் சீடனைத் தோற்கடித்துவிடும். அத்தோல்வி அவனது ஆன்ம முன்னேற்றத்தை அழித்துவிடும். அது அவன் உணரும் சிறிதளவு ஆன்மக் காட்சியையும் சுக்கு நூறாக்கி முன்னேறுவதற்கு வாய்ப்பையும் இல்லாது செய்துவிடும்.

## 2.33 புத்தியின் உண்மை இயல்பு

சாங்கியர்கள் புகட்டும் புலன் உலக வாழ்வை விடுவது நடைமுறைக்குச் சாத்தியம் இல்லை. உயர் ஆன்மாவுடன் புத்தியை இணைப்பதன் மூலமே புலன் உலக வாழ்விலிருந்து வெளியேற முடியும். புத்தியில் நிலைபெறவும் உயர் ஆன்ம மட்டங்களில் சீடன் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டும். ஆன்மிகப் பயணம் தேர்ச்சவாரியாக உருவகிக்கப்படுவது வழக்கம். புலன்கள் என்னும் குதிரைகள் மனம் என்னும் கடிவாளத்தால் நெறிப்படுத்தப்பட வேண்டும். அதற்காகத் தேரில் இருந்து குதிரைகளை அவிழ்த்து விடுவதோ அவற்றின் நடத்தையை முற்றாக நிறுத்தி விடுவதோ சவாரி நோக்கத்தை நிறைவேற்றாது. ஆன்ம நோக்கம் நிறைவேற மனம் சுத்தமாக வேண்டும். மனம் சுத்த மாவதற்கு சுயநலமற்ற செயல்களை மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம் பற்றுக்களில் இருந்துவிடுபடலாம். விருப்பங்கள் என்னும் புயல் ஓய்ந்து அமைதி அடைந்ததும் சீடன் தன்னிடத்திலே ஓர் ஞானமும் அமைதியும் தோன்றுவதைக் காண்பான். அவ்வேளையில் அவன் புத்தியின் உண்மையான இயல்பை உணர்ந்து அறிவான். அவனுக்கு இவ்வாறான புத்தி ஆன்மிக நூல்கள் எல்லாவற்றையும் காட்டிலும் ஆயிரம் மடங்கு உபயோகமானதாக இருக்கும்.

## 2.34 ஒளியின் பிரகாசம்

புத்தியை மனத்துடன் இணைப்பது இந்த அனுபவ நிலையிலேயே சாத்தியமாயும் வெற்றிபெறக்கூடியதாயும் அமையும். சீடன் அந்த நிலையை அடையாது விடின் ஆன்ம அறிவினை மூடியுள்ள இருளை விரட்ட முடியாது. ஆனால் அந்த இணைப்பு கைவரப் பெற்றதும் ஆன்மஒளி தானே பிரகாசிக்கும். அந்த ஒளிப்பிரகாசம் எல்லா இருளையும் சீடனிடமிருந்து விலக்கி ஆன்மிகப் பாதையில் முன்னேற வழிகாட்டும்.

## 2.35 முடிவான விடுதலை

சீடன் ஆன்மிகப் பாதையில் முன்னேறி உயர்நிலையான பிரம்ம நிலையை அடைந்தால் அதன் பின் அவனை வேறு எதனாலும் ஏமாற்ற முடியாது. அவன் சரியான பாதையில் பிரயாணம் செய்வதால் இறுதிநிலை நெடுந்தூரத்தில் தென்பட்டாலும் அந்த ஒளி அவனுக்கு வழிகாட்டி முடிவான விடுதலை அவனுக்கு உறுதி என்பதைப் பறைசாற்றும். மரணத்தறுவாயில் கூட அந்நிலையில் நிற்கக்கூடியவன் உயர்ந்த முடிவான விடுதலையைப் பெறுகின்றான்.

### கீதையில் சாத்திரமும் கலையும்

பகவான் வாழ்க்கையின் தத்துவங்களை என்னவோ சொல்லி விட்டார். ஆனால் தத்துவங்களைச் சொல்லுவதனாலேயே காரியம் நிறைவேறாது. கீதையில் வர்ணிக்கப்பெற்றுள்ள இத்தத்துவங்கள் உபநிடதங்களிலும் ஸ்மிருதிகளிலும் ஏற்கெனவே இருப்பவையே. கீதை அவைகளையே மீண்டும் எடுத்துக் கூறிற்று எனில் இதில் கீதைக்குச் சிறப்பு எதுவுமில்லை; அதன் தனிச் சிறப்பு இத்தத்துவங்களை நடை முறைக்குக் கொண்டு வருதல் எப்படி என்பதைத் தெரிவிப்பதிலேயே அடங்கியிருக்கிறது; இப்பெரிய பிரச்சினையைத் தீர்ப்பதிலேயே கீதையின் திறம் அனைத்தும் அமைந்துளது.

வாழ்க்கையின் தத்துவங்களை நடைமுறைக்குக்கொணருவதற்கு உள்ள கலை அல்லது புத்திக்கே 'யோகம்' என்று பெயர். 'சாங்கியம்' என்பதற்குத் தத்துவம் அல்லது சாத்திரம் என்பது பொருள்; 'யோகம்' என்பதற்குக் கலை என்று அர்த்தம். ஞானதேவர், 'யோகியர் வல்லவர் வாழ்க்கைக் கலைகதனில்' என்று சான்று பகர்கிறார். கீதையில் சாங்கியம், யோகம் - சாத்திரம், கலை - ஆகிய இரண்டின் கூட்டினால் வாழ்க்கையின் அழகு மலர்கிறது.

# திருவாசகம்

மாணிக்கவாசகர் இறைவன் அருளைப் பெற்ற ஞானி, அவருடைய பாட்டுக்கள் உயர்ந்த அநுபவத்தை எடுத்துரைக்கும் ஞானப்பாடல்கள், நெஞ்சை உருக்கும் கனிவு அமைந்தவை. உருக்கமான பக்தியும் உயர்ந்த மெய்யுணர்வு நிலையும் அந்தப் பாட்டுக்களில் ஒருங்கே காணப்படுகின்றன. "திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்", என்பது பழமொழி யாகியுள்ளது. "மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறை" என்று இராமலிங்க சுவாமிகள் திருவாசகத் தைப் போற்றிக் கூறியுள்ளார்.

மாணிக்கவாசகர் மதுரையில், பாண்டிய அரசனிடம் அமைச்சராக இருந்தவர். நாட்டை ஆளும் பொறுப்பில் பல காலம் பயின்றவர். ஆகையால், உலகியல் அறிவு நிறைந்தவராக விளங்கினார். ஆயினும் அந்த அமைச்சர் பதவியோ, அதனால் பெற்ற செல்வாக்கோ, புகழோ அவர் மனத்துக்கு நிறைவு கொடுக்கவில்லை. உலக வாழ்வு செல்வத்தாலும், புகழாலும் எவ்வளவு நிறைந்திருந்த போதிலும் ஏதோ ஒரு பெருங்குறை உடையதாகவே தோன்றியது. உயர்ந்த அமைச்சர் பதவியும், பெருமையும், செல்வாக்கும் பெற்றிருந்த மாணிக்கவாசகரின் வாழ்க்கையில் உணரப்பட்ட குறை, குன்றின்மேல் ஏறி நின்றும் பறக்கமுடியவில்லையே என்று உணரும் குறை போன்றது ஆகும். எல்லாம் பெற்ற பிறகும் சிவ பெருமான் திருவருளைப் பெறவில்லையே என்ற குறை அவர் நெஞ்சத்தில் இருந்து வந்தது.

திருப்பெருந்துறை என்ற ஊரில் அந்தக் குறை தீரும் வழி பிறந்தது. சிவபெருமான் அவர் விரும்பும் குருவடிவாய் எழுந்தருளினார். ஒரு குருந்த மரத்தின் நிழலில் அடியார் கூட்டத்தின் நடுவே காணப்பட்டார். மாணிக்கவாசகர் அந்தப் பெருமானின் கருணை நோக்கினால் கவரப்பட்டார். குருவருளால் ஆட்கொள்ளப்பட்டார்.

"கண்ணால் யானும் கண்டேன் காண்க
அருள்நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானும் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண் டருளினன் காண்க"

என்று அவரே தாம் பெற்ற பெரும்பேற்றை விளக்கியுள்ளார்.

குருவடிவாய் வந்தவரின் திருவருளைப் பெற்றவுடன் மாணிக்கசவாசகர் புத்துணர்வு பெற்றார். உடம்பெல்லாம் தேன் பாய்ந்தது போல் உணர்ந்தார். உள்ளத்தில் ஆனந்த அநுபவம் உற்றார்; தம்மை மறந்தார்; வியந்தார்; மயங்கினார்; இன்னது என்று சொல்ல இயலாத நிலை அடைந்தார்; அந்நிலையில் ஆட்கொண்ட பெருமான் மறைந்தார்; தெளிவு பெற்றுத் தேடிய மாணிக்கவாசகர் அவரைக் காண வில்லை, உடனே அலறினார்; கலங்கினார்; ஓலமிட்டார்; ஏங்கினார்; பலவாறு வேண்டினார்; பாடினார். இந்த நிலைகளே அவர் பாடிய திருவாசகப் பாட்டுக்கள் பலவற்றில் காணப்படுவன. சிலவற்றில் அவர் பெற்ற ஆனந்த அநுபவமும், சிலவற்றில் பெருமானை விட்டுப் பிரிந்த பிரிவாற்றாமையும், இன்னும் சிலவற்றில் அவர் பெற்ற தெளிந்த மெய்யுணர்வும் ஆகிய மூவகைப் பொருள் அமைந் தவை திருவாசகப் பாட்டுக்கள்.

"அரைசனே அன்பர்க்கு அடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யான் உன்னை உரைக்குமா றுணர்த்தே,"

இது முதலான பல பாட்டுக்களில் அவர் பெற்ற ஆனந்தத்தை நினைத்து மகிழ்கின்றார். "அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்" என்று பூரிப்படைகிறார். குருபிரானாக வந்தவர், தம்மையே மாணிக்கவாசகர்க் குத் தந்து அதற்கு ஈடாக அவரையே பெற்றுக் கொண்டதாகச் சொல்கிறார்.

"தந்தது உன்றன்னைக் கொண்டது என்றன்னை", என்று சதுரப்பாட்டை எடுத்துப் பேசுகிறார். ஆனால் குருபிரான் மறைந்த பிறகு பிரிவாற்றாமையால் நைந்து உருகி முறையிடுகிறார். "என்னை நீயே வலிய வந்து ஆட்கொண்டாய். அப்போது காணாத குற்றம் இப்போது என்னிடம் புதிதாகக் கண்டாயோ? என்னை

இந்த மண்ணுலகில் தனியே வருந்துமாறு விட்டுச் சென்ற காரணம் என்னவோ?" என்று முறையிடுகிறார்.

"ஒன்றும் போதா நாயேனை
உய்யக் கொண்ட நின்கருணை
இன்றே இன்றிப் போய்த்தோ தான்?
ஏழை பங்கா எங்கோவே
குன்றே அனைய குற்றங்கள்
குணமாம் என்றே நீ கொண்டால்
என்தான் கெட்ட திரங்கிடாய்
எண்தோள் முக்கண் எம்மானே."

இவ்வாறு முறையிடுதல் மட்டும் அல்லாமல், இறைவனைப் பிரிந்த பிரிவால் மிக வருந்துகிறார்; பாடிச் சோர்கிறார். மீண்டும் எழுந்தருளித் தம்மை ஆட்கொள்ள வேண்டும் என்றும், தம்மிடம் வருமாறு அருள்புரிய வேண்டும் என்றும், அவ்வாறு தம்மை ஏற்றுக்கொள்ளாவிடில் தாம் வாழ விரும்பவில்லை என்றும் முறையிடுகிறார்.

"யாரொடு நோகேன்? ஆர்க்கு எடுத்துரைக்கேன்?" என்கிறார்.

"வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்" என்று தம் முடிவை எடுத்துரைக்கிறார்.

மதுரையில் அமைச்சர் பதவியில் ஒட்டியிருந்த காலத்திலேயே, அவர் தம் நெஞ்சின் ஆழத்தில் ஒரு குறை இருந்து வந்தது; கடவுளருளை நாடிய பசி இருந்து வந்தது; திருப்பெருந்துறையில் குருபிரானின் அருளைப் பெற்றுப் பிரிந்தபிறகு, அந்தக்குறை தெளிவான வடிவம் பெற்றது. அதுவரையில் எது எதையோ மனத்திற்குத் துணை என்று கொண்டிருந்ததை எல்லாம் துணிந்து கைவிட்டார். கடவுளே மனத்துணை எனக் கொண்டார். பதவி முதலியவற்றை வாழ்முதல் என்று கொண்டிருந்த மயக்கத்தை அடியோடு துறந்தார். இறைவனே வாழ்முதல் எனத் தெளிந்தார். செல்வம் முதலியவற்றை எய்ப்பில் வைப்பு என எண்ணியிருந்த பொய்ம்மை தீர்ந்தார். சிவனருளே எய்ப்பில் வைப்பு என்ற மெய்யுணர்வு பெற்றார்.

"மனத்துணையே என்றன் வாழ்முதலே எனக்கு
எய்ப்பில் வைப்பே"

என்று பாடினார். அந்நிலையில், இறைவனின் அருளை நாடி அடைவதற்குத் தடையாக இடையூறாக இருப்பது தம் உடம்பே என உணர்ந்தார்.

"துயர்தரும் இந்த உடம்புஎன் ஆன்மிக முயற்சிக்கு இடையூறாய் என்னைச் சிறைப்படுத்தும் ஒரு வலிய வலையாக உள்ளதே" என்றார். இந்த வலையை இனி ஒரு தினைப்பொழுதும் பொறுத்திருக்கமாட்டேன் என்றார்.

"தினைத்துணையேனும் பொறேன் துயர் ஆக்கையின்
திண்வலையே"

இத்தகைய பாட்டுக்களில் நெஞ்சை உருக்கும் நீர்மையைக் காண்கிறோம். ஒவ்வொரு தொடரும் நெகிழ்ச்சியைப் பெருக்கி நெக்குருகச் செய்யவல்ல கனிவுடன் அமைத்திருக்கக் காண்கிறோம். மாணிக்க வாசகர் நெஞ்சத்தின் உருக்கத்திலிருந்து பிறந்த சொற்கள் ஆகையால், திருவாசகப் பாட்டுக்கள் இன்னும் நூறாயிரக்கணக்கானவர்களின் நெஞ்சை உருக்கி வருகின்றன. உள்ளங்காலிருந்த உச்சிவரையில் உடம்பு முழுதும் நெஞ்சமே ஆக உருகவேண்டும் என்று ஆசைப்பட்டவர் அவர். உடம்பெல்லாம் கண்ணாக இருந்து கண்ணீர் வெள்ளம் பெருக வேண்டும் என்று விழைந்தவர் அவர்.

"உள்ளந்தாள் நின்றுச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்பெல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்"

இவ்வாறான கனிவும் உருக்கமும் மிகுந்த பக்திப் பாட்டுக்களுக்கு இடையே, தெளிந்த உண்மைகளை உணர்த்தும் ஞானப்பாட்டுக்களும் உள்ளன. உயிரின் தன்மை என்ன, உலக வாழ்க்கை எப்படிப்பட்டது, வாழ்க்கையில் உய்வதற்கு வழி என்ன, இறைவன் தன்மை என்ன, திருவருள் கூடுவது எவ்வாறு முதலிய பல உண்மைகளைத் தெளிய உணர்த்தும் உயர்ந்த தத்துவப் பாட்டுக்கள் திருவாசகத்திற் செறிந்துள்ளன. அடியார்கள் திருவாசகத்தைப் பொருளுணர்ந்தோதி, இன்பமெய்தி உய்வார்களாக.

தேவர் குறளும், திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும், முனிமொழியும், - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்,
ஒருவாசகம் என்றுணர்.

# ஆட்கொள்ளும் வித்தகர்

திருவாசகத்தின் கண் வரும் சிறந்த இனிய பற்பல தொடர்களில், 'ஆட்கொள்ளும் வித்தகர்' என்பது ஓர் அரும்பெறற் பெரும் பொருட்தொடர் திருவெம்பா வையில் 15ஆம் செய்யுளில் வருகிறது.

"ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்?" எனவரும் வரியில், இவ்வினிய நல்ல தொடர் செவ்விதிற் பயின்றிருத்தல் காணலாம். ஆட்கொள்ளும் வித்தகர் சிவபெருமான், ஆட்கொள்ளப்பட்ட வித்தகர், மணிவாசகர், ஆட்கொள்பவரைத் தலைவர் அல்லது எஜமானார் என்றும், ஆட்கொள்ளப்படுபவரை அடியவர் அல்லது பணியாளர் என்றும் குறிப்பது வழக்கம்.

இங்கு மணிவாசகர் இறைவனை, 'ஆட்கொண்ட வித்தகர்' என்னாமல் "ஆட்கொள்ளும் வித்தகர்" எனத் திருவாய் மொழிந்தருளிய அருமைப்பாடு பெரிதும் போற்றுதற்குரியது. தம் ஒருவரை ஆட்கொண்டது மட்டுமேயன்றி, எல்லா உயிர்களையும் எல்லாக் காலத்தும் எல்லா இடத்தும் ஆட்கொண்டு அருள் புரியும் இயல்பினன் சிவபெருமான் என்பதனை, மணிவாசகர் இவ்வாற்றாற்புலப்படுத்தியருளினார். இதன்கண் உலகில் பிறரை ஆட்கொள்ளும் தலைவர்களுக்கும், தம்மை ஆட்கொண்டருளிய தலைவருக்கும் இடையேயுள்ள, வேறுபாடுகளைக் குறிப்பிற் புலப்பட விளக்கியருள்கின்றார் மணிவாசகர். நினைத்தொறும் நினைத்தொறும் அரிய பல உண்மைகளை உணர்த்திக்கொண்டு நிற்கும் இத்தொடரின் பொருள் நுட்பங்களை இங்கு நாம் ஒரு சிறிது சுருக்கமாகச் சிந்தித்து இன்புறுவோமாக!

(1) உலகத்தில் ஆட்கொள்ளுபவர் அனைவரும், தாம் ஆட்கொள்ளும் அடிமைகளால் தமக்கு விளையும் பலதிற நலங்களையும் வசதிகளையும் எண்ணியே, அடிமைகளை அமர்த்திக் கொள்வர். இதுதான் உலகியல் தலைவர்களின் இயல்பு. ஆனால் குறைவிலா நிறைவினன் ஆக விளங்கும் இறைவனாகிய அருளியல் தலைவனோ, அடியவர்களால் தனக்கு ஏதேனும் வசதியும் நலமும் விளையும் என்று எதிர்பார்க் கின்றிலன், தன்னை அடைந்தவர்களுக்குத்தான் இன்பம் தருதலை விரும்பியே, அவன் அடியவர்களை ஆட்கொள்ளுகின்றான். "தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான்" "சங்கரனார் தம்மைப்போலத் தம் அடியவர்கட்கும் இன்பம் அளிப்பவர்" என்பது சம்பந்தர் தேவாரம், "இன்பமே என்னுடைய அன்பே" என்பர் மணிவாசகர்.

(2) உலகில் தலைவர்கள் தமக்கு ஆட்செய்ய, அனைவரையும் ஏற்றுக்கொள்வதில்லை. ஒருசிலரை மட்டுமே மிகவும் ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொண்டு, மற்றவர்களை நீக்கிவிடுவர். ஆனால் இறைவனோ தன்னை அடைந்தவர்கள் அனைவ ரையுமே விரும்பி ஆட்கொண்டு அருள்புரிகின்றான். "ஆரேனும் தன்னடைந்தார் தம்மையெல்லாம் ஆட்கொள்ளவல்ல நம் ஈசனார்" என்பது, திருநாவுக்கரசர் அருளிய திருத்தாண்டகம். தன்னை அடையாதவர்களை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றான் இறைவன். "ஆணும் பெண்ணுமாய் அடியார்க்கு அருள் நல்கிச் சேண் நின்றவர்க்கு இன்னம் சிந்தை செய்ய வல்லான்" என்பது சம்பந்தர் தேவாரம்.

(3) உலகத்துத் தலைவர்கள் தமக்குப்பணி செய்தற்குரிய ஆட்களைத் தேர்ந்தெடுக்குங்கால், மிக்க தகுதியும் திறமையும் உடையவர்களை மட்டுமே, தேர்ந்தெடுத்து அமைத்துக்கொள்வர். ஆனால் இறைவனாகிய தலைவனே அங்ஙனம் இன்றி, மிகமிகத் தகுதி குறைந்தவர்களையும், ஒரு தகுதியும் இல்லாதவர் களையும், தானே தன் அருளால் விரும்பி வந்து ஆட்கொள்ளுகின்றான். "நாயிற்கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்" "யாவருக்கும் கீழாம் அடியேனை யாவரும் பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்" "என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்" "வான் பழித்து இம்மண்புகுந்து மனிதரை ஆட்கொண்ட வள்ளல்" "பொற்றவிசு நாய்க்கு இடுமாறு அன்றே நின் பொன்னருளே" என்றெல்லாம் மணிவாசகர் அருளிச் செய்திருத்தலைக் காணலாம்.

"நான் நின் அடியேன்; நீ என்னை
ஆண்டாய் என்றால், அடியேற்குத்
தானும் சிரித்தே யருளலாம்
தன்மையாம் என் தன்மையே" திருச்சதகம். 58

(4) உலகத்திலுள்ள தலைவர்கள், தாம் தமக்கு ஊழியம் செய்தற்கு அமர்த்திக் கொள்ளும் பணியாளர்களுக்கு அவர்கள் விரும்பும் அளவு ஊதியம் தர உடன்படார். பணியாளர்கள் விரும்பும் ஊதியத்திலும் சிறிது குறைவாகவே கொடுப்பர். குறைந்த ஊதியத்தில் நிறைந்த, பல வேலைகளை

வாங்கிக்கொள்ள விரும்புவதே உலகத்தில் எஜமானர்களின் இயல்பு! ஆனால் இறைவனாகிய எஜமானனோ, தனக்கு ஊழியம் செய்யும் அடியவர்கள் வேண்டுவன எல்லாம் தருவான்; அவர்களின் ஆசை தீரும்படி அவர்கள் கேட்பதனைக் காட்டிலும் கூட, மிக அதிகமாகக் கொடுப்பான்; "வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்" என்பது அப்பர் தேவாரம், 'வேண்டத்தக்கது அறிவோய் நீ, வேண்டமுழுதும் தருவோய் நீ' என்பது மணிமொழியாரின் திருவாசகம், "ஆசைதீரக் கொடுப்பார் அலங்கல் விடைமேல் வருவார்" என்பது திருஞானசம்பந்தர் திருமொழி.

(5) உலகத்துத் தலைவர்கள், தமக்குரிய ஊழியர்களை அமைத்துக் கொண்டால் அவர்களுக்கு இடையே நிலவும் உறவு - தலைவர் என்னும் உறவு ஒன்றேயாகும். ஆனால் இறைவன் தன் அடியவர்களுக்கு வெறும் தலைவனாக மட்டுமல்லாமல், தந்தையாகவும் தாயாகவும் நண்பனாகவும் குருவாகவும் மற்றும் எல்லா உறவுமாகவும் அமைந்து நலம் புரிகின்றான். ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய்" என்பது திருநாவுக்கரசர் தேவாரம், "தாயும் நீயே தந்தை நீயே" என்பர் சம்பந்தர், "நண்பா என்உயிர் நாதா!" "எந்தை எம்தாய் சுற்றம் மற்றும் எல்லாம் என்னுடை பந்தம் அறுத்து என்னை ஆண்டு கொண்ட பாண்டிப்பிரான்" என்பர் மணிவாசகர்!

(6) உலகத்துத் தலைவர்களில் பெரும்பாலோர், தம் ஊழியர்களின்பால் போதிய அன்பு காட்ட மாட்டார்கள். அவர்களிடம் நல்லவர்களாக இருக்க மாட்டார்கள். தம் ஊழியர்களைக் கடுமையாகவும் நடத்துதல் பலரிடம் காணப்படும் பொதுவான இயல்பு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லவன். அவன் அடியவர்களுக்கு மிகவும் நல்லவன். அடியவர்களிடம் அன்பும் பரிவும் அருளும் காட்டுபவன். "கண்ணுளார் கருவூருள் ஆனிலை அண்ணலார் அடியார்க்கு நல்லவரே" என்பது சம்பந்தர் தேவாரம்.

(7) உலகத்துத் தலைவர்களில் பலர், தம் ஊழியர்கள் தம்மை அணுகமுடியாதபடி அரியராக இருப்பர். அத்தன்மையவர்களை நினைக்கும் போதெல்லாம், ஊழியர்களுக்கு அச்சமே மிகுதியும் ஏற்படுவதுண்டு. ஆனால் இறைவனாகிய தலைவனோ அத்தகையவன் அல்லன். அவன் அடியவர்களுக்கு மிக மிக எளியவன். "அடியார்க்கு எளியன் சிற்றம்பலவன்" என்று தன்னைத்தானே இறைவன் சுட்டிக்கொள்வதாக ஒரு தனிப் பாடலும் உண்டு. சிவபெருமான் ஆகிய தலைவன், அடியவர்களின் அச்சத்தைப் போக்கி ஆட்கொண்டு அருளுவான். "அச்சம் தீர்ந்து ஆட்கொண்டான் அன்பு கூர" "அறம் பாவம் என்றிரண்டு அச்சம் தவிர்த்து என்னை ஆட்கொண்டான்" என்பர் மணிவாசகர்.

(8) உலகத்துத் தலைவர்கள் பலரிடத்தில் ஊழியம் செய்வது மிக மிகக் கடினமாக இருக்கும். தமது ஊழியர்களைப் பலவகைகளில் அலைக்கழித்து, இடையறாது கடினமான வேலைகளைத் தொடர்ந்து செய்யும்படி, ஏவிக்கொண்டே இருப்பர் சிலர். ஆனால் இறைவனாகிய தலைவனோ, தன் ஊழியர்களுக்கு எவ்வித கடினமான வேலைகளையும் அளிப்பதில்லை. தனது அடியர்கள் எவ்வகையான வேலையையும் செய்ய வேண்டாம் என்றே, அவன் பணித்தருள்கின்றான்.

சமயத்துறையில் அருளியல் வாழ்வில், "சும்மா இருத்தல்" என்பது ஒரு சிறந்த பெரும்பேறு. "இன்று வருமோ? நாளைக்கே வருமோ? மற்று என்று வருமோ? சும்மா இருக்கும் சுகம்" என்று ஏங்கி இரங்குகின்றார் இராமலிங்கர். "சும்மா இரு" என்பதே, முருகன் அருணகிரிநாதருக்குச் செய்த அருளியல் உபதேசம். அதன் அருமை பெருமைகளைப் பாராட்டிச் "சும்மா இரு சொல்லற என்றலுமே. அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" என்று, அருணகிரிநாதர், தமது கந்தர் அநுபூதியில் வியந்து கசிந்து உருகுகின்றார். அருணகிரிநாதரின் இத்திருமொழியில் மிகவும் ஆழ்ந்து ஈடுபட்டு "அருணகிரிநாதர் அநுபவம் நாயேற்குக் கருணைபொழி போரூரா காட்டு" என்கின்றார் சிதம்பர சுவாமிகள். இதனையே மாணிக்கவாசகர் "என்னுடைய செயல் மாண்டவா பாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்கிறார். திருக்களிற்றுப்படியார் ஆசிரியர், "செய்தற்கு அரிய செயல் பலவும் செய்து சிலர், எய்தற்கு அரியதனை எய்தினர்கள்; ஐயோ! நாம் செய்யாமை செய்து செயலறுக்கலாய் இருக்கச் செய்யாமை செய்யாதவாறு" என்று சிந்தை நொந்து உரைக்கின்றார். உலகத்திலுள்ள தலைவர்கள் வற்புறுத்திப் பற்பல வேலைகளை வாங்குபவர்களாக இருக்க, இறைவனாகிய தலைவனோ தன் அடியார்களைச் "சும்மா இருங்கள்" என்று சொல்லி ஆட்கொள்ளுகின்றான் எனின், அவ்வித்தகனின் வியக்கத்தக்க பெருமையினை என்னென்பது.

உலகத்தில் தலைவர்கள் தங்களுக்குப் பல திறப்பணிவிடைகளைச் செய்வதற்கென்றே ஏவலர் பலரை அமர்த்திக் கொள்வது வழக்கம். ஆனால் இறைவனோ தன் தொண்டர்களைச் "சும்மா இரு" எனச்

சொல்வது மட்டும் அன்றி, அவர்களுக்குத் தானே வலிந்து வந்து பல திறப்பணிகளைச் செய்து மகிழ்கின்றான். கண்ணபிரான் பாண்டவர்களுக்குத் தூதுபோனான்: பார்த்தனுக்குச் சாரதியாக அமர்ந்து பணியாற்றினான்! சிவபிரான் சுந்தரர் பொருட்டுப் பிச்சை எடுத்துழன்றதும், பரவையார் பால் தூதுசென்றதும் பாணபத்திரர்க்காக விறகு சுமந்ததும் வந்தியம்மைக்கு கூலியாளாய் வந்து மண்சுமந்து பிரம்படிபட்டுப் புண் சுமந்ததும் போன்ற வரலாறுகள் இங்கு எண்ணி இன்புறத்தக்கன.

எசமானர்களின் மூட்டை முடிச்சுக்கள் ஆகிய பாரங்களைத் தூக்கி சுமந்து கொண்டு உடன் செல்லுதல், உலகத்து வேலைக்காரர்களுக்குரிய இயல்பு, ஆனால் இறைவனோ "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுடைய பாரத்தைச் சுமந்துகொண்டு உங்களுக்கு ஆறுதல் அளிக்கின்றேன்" என்று தன் அடியவர்களின் பாரங்கள் பலவற்றையும் தானே வலிந்துவந்து ஈர்ந்து ஏற்றுச் சுமந்து கொள்கின்றான். 'தமக்கு அன்புபட்டவர் பாரமும் பூண்பர், ஆரூர் அரநெறியாரே' என்பர் திருநாவுக்கரசர். சைவசித்தாந்த சந்தான ஆசிரியர்களுள் ஒருவராகிய உமாபதிசிவமும் இறைவனுக்கு "எடுத்துச் சுமப்பான்" (Porter) என்னும் ஒரு பெயரைப் புதிது படைத்துத் தமது திருவருட்பயன் என்னும் நூலில் வழங்கியிருத்தல் காணலாம். 'செம்மலர் நோன்தாள்' "மதனுடை நோன்தாள்" என்னும் ஆன்றோர் அருந்தொடர்களும், இவ்வுண் மையினை வலியுறுத்தும்.

ஒரு சில எசமானர்கள், தம் கீழ்ப் பணியாற்றும் வேலைக்காரர்கள் செய்யும் செயல்களில், எப்போதும் குற்றம் குறைகளையே கண்டு பிடித்துச் சுட்டிக்காட்டிச் சீறிச்சினந்து வைதுபழிப்பர். கடுந்தண்டனைகளும் கொடுப்பர், ஒரு சிலர் பணியாட்கள் நல்லதே செய்தாலும் கூட, குற்றமாகவே பிழை உணர்ந்து வெகுள்வர். இறைவனோ தன் அடியவர்களின் குற்றங்குறைகளைக் கூறிக்கொண்டு நோக்கமாட்டான். கண்டும் காணாததுபோற் பெருந்தன்மையாக இருந்து விடுவான். அடியவர்கள் செய்யும் பிழைகளுக்காக அவர்களுக்கு தீங்கு எதுவும் செய்யமாட்டான். அன்பர்கள் செய்யும் பிழைகளை மறப்பதிலும், மன்னித்துப் பொறுமை காட்டுவதிலும், இறைவனுக்கு இணையாவார் இலர். "குறையுடையார் குற்றம் ஓராய் கொள்கையினால் உயர்ந்த நிறையுடையார் இடர்களையாய் நெடுங்களம் மேயவனே" என்பது சம்பந்தர் தேவாரம். "பின்னை என் பிழையைப் பொறுப்பான், பிழை எலாம் தவிரப் பணிப்பான்" என்பது சுந்தரர் திருப்பாடல். "பேயேனது உள்ளப் பிழை பொறுக்கும் பெருமையன்" என்பது திருவாசகம். "ஏது பிழை செய்தாலும் ஏழையேனுக்கு இரங்கித் தீது புரியாத தெய்வம்" என்றும் "போரிப் பிரான் எம்பிழை பொறுத்தால் அன்ன பூதலத்தே யார் இப்படி பொறுப்பார்?" என்றும் வியந்து வினவித் துதிப்பர் சிதம்பரசுவாமிகள்.

ஊழியர்பாற் குற்றங்கண்டால் கடிந்து தடிவது எசமானர்களின் இயல்பு, தமது ஊழியர்கள் தவறு செய்யின், உலகத்து எசமானர்களுள் தலையாயினர் பிழையை உட்கொண்டு அமைதலும் இடையாயினர் அவரைத்துறத்தலும், கடையாயினார் அவரைக் கெடுத்தலும் செய்யக் காண்கின்றோம். (கோவையார் 25) இம்மூவகையும் செய்யாது இரங்கிக் காத்தருள்பவன் இறைவன்.

உலகத்துத் தலைவர்களின் மனமும் முகமும் அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கும்; அவர்கள் காட்டும் அன்பும் எப்போதும் ஒரு நிலையில் இராது. "காலையில் ஒன்றாவர்; கடும் பகலில் ஒன்றாவர்; மாலையில் ஒன்றாவர் மனிதரெல்லாம்" என்று ஒரு தனிப்பாடல் கூறுவதுபோல, அடிக்கடி உலகியல் தலைவர்களின் மனமும் குணமும் மாறி மாறி வேறுபட்டுக்கொண்டேயிருக்கும். ஆனால்அருளியல் தலைவனாகிய இறைவனோ அத்தகையவன் அல்லன். அவன் என்றும் மாறாத நிலைபேறான இயல்புகள் உடையவன். தன் அடியவர்களிடம் அவன் எப்போதும் இனியவனாகவே விளங்குவான். இதனை நமது திருநாவுக்கரசர் "எப்போதும் இனியானை என் மனத்தே வைத்தேனே" என்று தமது கச்சித் திருவேகம்பம் பற்றிய தேவாரப் பாடலிற் குறித்திருத்தல் காணலாம்.

முடிவுரை:

இங்ஙனம், இன்னும் எத்தனையோ பல வகையில் எண்ணியுணர்ந்து இன்புறுதற்கேற்ற நிலையில், ஆட்கொள்ளும் வித்தகர்' என்னும் அழகிய இனிய அரியதொடர், அமைந்திருக்கின்றது. இத்தகைய எத்தனையோ பற்பல அரும்பெருந் தொடர்கள், திருவாசகத்தின் கண் ஏராளமாகப் பயின்றுவரக் காண்கின்றோம். அவற்றினையெல்லாம் ஓதியுணர்ந்து, நீள நினைந்து ஆழ்ந்தறிந்தும் மகிழ்தல், நம்மனோர் இறையருள் நெறியில் தலைப்பட்டு உய்தி பெறுதற்குப் பெரிதும் துணை புரியும் என்பது திண்ணம்.

# அவனன்றி ஓர் அணுவும் அசையாது

'இந்த நகரத்தில் அரசர் இருப்பதால் எல்லாம் நன்றாக நடக்கின்றது. அவர் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது' என்று அடிக்கடி சொல்லும் அரசபக்தன் ஒருவன் இருந்தான்.

'எல்லாம் இறைவனின் இன்னருள். அவன் இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது' என்று அடிக்கடி சொல்லும் ஒரு கடவுட் பக்தனும் அந்நகரில் இருந்தான்.

இவர்களிருவருக்குமிடையே அடிக்கடி வாதம் நடைபெறும். அரசபக்தி பலன்தரும் என்பான் ஒருவன். கடவுட்பக்தியே பலன் தரும் என்பான் மற்றவன். இவ்வாறு அவர்கள் சண்டைபோட்டுக் கொள்வார்கள்.

ஒருநாள் மாறுவேடத்தில் நகரைச் சுற்றிவந்த அரசன் இவர்கள் இருவருடைய சண்டையையும் அவதானித் தான். கடவுள் பெரியவரா; தான் பெரியவனா என்ற சந்தேகம் அவனுக்கும் உண்டாகத் தலைப்பட்டது.

தன்னுடைய பெருமையை நிலைநாட்டக் கருதிய அரசன் மாளிகை திரும்பியதும் ஒரு பெரிய பூசினிக் காயை எடுத்து அதைக் குடைந்து உள்ளேயுள்ளதை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக அதற்குள் தங்க நாணயங்களையும் வைரங்களையும் போடுவித்து அதனைக் குடைந்தெடுத்த இடம் தெரியாமல் மூடு வித்தான். தன்னைப் புகழ்ந்த அரசபக்தனை அழைப் பித்தான். அவனுக்கு அப் பூசினிக்காயைப் பரிசாக அளித்தான்.

அரச பக்தனும் தனக்குக் கிடைத்த பூசினிக்காயைச் சுமந்துகொண்டு போனான். பூசினிக்காய் கிடைத்தமை பற்றி அவனுக்கு அதிக மகிழ்ச்சி உண்டாயிற்று. போகும் வழியில் அதனை ஒரு ரூபாய்க்கு விற்றான். மகிழ்ச்சியோடு வீடு திரும்பினான். பூசினிக்காயை வாங்கியவன் அதனைத் தான் வாங்கிய விலையிலும் அதிகமான விலைக்கு விற்கக் கருதித் தன் கடையில் வைத்திருந்தான்.

அவ்வழியாகக் கடவுட் பக்தனும் போக நேரிட் டது. கடையிலிருந்த பூசினிக்காயைக் கண்டதும் அதனை ஒன்றரை ரூபாவாக விலை பேசி வாங்கினான். வாங்கிக் கொண்டு வீடு திரும்பினான்.

வீட்டில் கறிசமைப்பதற்காக அப்பூசினிக்காயை வெட்டுவித்தான். அதிலிருந்த தங்க நாணயங்களையும் வைரக் கற்களையும் கண்டு அவன் பேராச்சரிய மடைந்தான். கடவுள் தந்ததாக எண்ணி அவற்றைப் பத்திரப்படுத்தி வைத்தான்.

அடுத்தநாள் அரசன் கடவுட் பக்தனையும் அரச பக்தனையும் அழைத்து வரும்படி ஆள் அனுப்ப, அவர்களிருவரும் சென்றார்கள். அரசன் அரச பக்தனை நோக்கி நேற்று உனக்கு ஒரு பூசினிக்காய் கொடுத் தேனே அதை என்ன செய்தாய்? என்று கேட்டான். "அரசே! அதை யான் ஒரு ரூபாய்க்கு விற்றேன்" என்றான் அவன். அரசன் வாயை மூடினான்.

கடவுட் பக்தன் முன்வந்து "அரசே! நேற்று நான் கடைவீதிக்குப் போனேன். அங்கே ஒரு பூசினிக்காயை ஒன்றரை ரூபா கொடுத்து வாங்கினேன். அதற்குள் தங்க நாணயங்களும் பல வைரக் கற்களும் இருந்தன." என்றான்.

அரசன் அவர்களை நோக்கி "ஆண்டவன் அருள் மிகப்பெரியது. அரசன் அருள் பயனற்றது" என்று கூறினான். அரச பக்தனுக்கு ஒன்றுமே நன்றாகப் புலப்படவில்லை.

பின்பு அரசன் அவர்களை நோக்கி "இந் நாட்டு மக்களை நான் அரசாளவில்லை. ஆண்டவனே அரசாட்சி செய்கிறான்" என்று கூறி அவ்விருவருக்கும் பரிசில்கள் வழங்கி அனுப்பி வைத்தான் என்ப,

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது"
- தாயுமானவர்

# பெரியபுராணமும் சைவசித்தாந்தக் கொள்கையும்

இலக்கியங் கண்டு, அதற்கு இலக்கண மியம்புவர் இயற்றமிழ்ப் புலவர்கள். முற்காலத்து வாழ்ந்த தமிழறிஞர்கள் தம் மாணாக்கர்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொழுது முதலில் நைடதம், பாரதம், கம்பராமாயணம் முதலிய இலக்கியங்களைப் போதித்து, அதன் பின்னரே நன்னூல் முதலிய இலக்கண நூல்களைப் போதிப்பர். அவ்வாறே சங்க இலக்கியங்களைக் கற்பித்த பின்னரே தொல்காப்பியம் கற்பிக்கப்படும். இயற்றமிழின் திறத்தை அறிவதற்கு அமைந்த இந்த முறைமைபோல சைவசமயத்தின் இலக்கணத்தை அறிதற்கும் அவ்வறிவு துணையாக வாழ்க்கை நடத்துதற்கும் விருப்புடையோர் முதலில் சைவப் பேரிலக்கியமாகிய பெரியபுராணத்தை நன்கு கற்று, அதன்கண் நுட்பமாயமைந்த சைவசித்தாந்தக் கோட்பாடுகளை 'உந்திகளிறு உயர் போதம் சித்தியார்' முதலாம் மெய்கண்ட சாத்திரங்கள் வாயிலாகப் பின்னர் தெளிந்து கொள்ளல் வேண்டும். அங்ஙனமன்றி, தனியாகச் சாத்திரங்களைக் கற்பதும், பெரியபுராணத்தைக் கற்றுச் சாத்திரங்களைக் கல்லாது விடுவதும் பெரும் பயனைத் தரமாட்டா.

### அன்பு நெறி அமைதல்

இராமாயணம் முதலியன, "தக்கவின்ன தகாதன வின்னவென்று" அறிவு காட்ட அந்நெறி நின்று சான்றோராய பெருமக்கள் வரலாற்றைக் கூறுவனவாம். அந்நூல்கள் மக்களை மக்களாய் வாழ வழிகாட்டுவன. மக்களாய் வாழ்ந்து சிறப்புற்ற தக்கோர்கள் தமது பண்பட்ட அறிவின் முதிர்ச்சியினாலும் முன்னைத் தவத்தின் நன்மைப் பாட்டினாலும் சிவனே ஆன்ம நாயகரென்றும் அவர்க்கன்பு செய்தலே தமக்கு இன்பமாவது என்றும் கருதும் உள்ளப் பாங்கினைப் பெறுவர். இக்கருத்து

"புறச்சமய நெறி நின்றும் அகச்சமயம் புக்கும்
புகன்மிருதி வழியுழன்றும் புகலு மாச்சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பல தெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதசிரப்பொருளை
மிகத்தெளிந்தும் சென்றாற் சைவத்
திறத்தடைவர் இதிற்சரியை கிரியையோகஞ்
செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வார்.

என்னும் சிவஞான சித்தித் திருவிருத்தத்தால் தெளியப்படும். இவ்வாறு இறையன்பில் தலைநின்ற மெய்யடியார்கள் இறைவன் மட்டுமன்றிக் குருவினையும், சிவவேடத்தினையும் சிவனெனக் கருதி அன்பு செய்து உய்ந்தனர். அவர் வரலாற்றைக் கூறுவதே பெரியபுராணமாகும்.

### மெல்வினையும் வல்வினையும்

தன் மகனிடத்துக் கழிபெருங் காதலுடைய தாயானவள் தனது மனை செல்வம் முதலிய எல்லாவற்றிலும் மேலாக அம்மகனையே கருதுகின்றாள். அதுபோல, சைவ நாயன்மார்களும் உலகியலார் போல மனைவி மக்களுடன் செல்வமும் உடையராயினும் சிவனையும் சிவனடியார்களையுமே மேலாக நேசித்தனர். இளையான்குடி மாறர்க்கு ஒருபோது வறுமையுண்டாக, அவர் தமக்கும் தம்மனையாட்கும் உணவு இல்லையே என்று நினையாது அடியார்களை அமுது செய்விக்க முடியவில்லையே என்று வருந்தினார் என்றும், குங்குலியக்கலயர் நாடோறும் சிவாலயத்தில் குங்குலியத் தூபமிட்டு வருங்கால் ஒரு பொருளும் இல்லையாம்படி வறுமை வந்துற்றதாக, தமது மனையாள் கொடுத்த தாலியைக் கொண்டு பொருள் பெறச் சென்றவர் வழியிலே குங்குலிய வியாபாரியைக் கண்டதும் தமது மனைவி மக்கள் முதலானோரின் பசித் துன்பத்தை நீக்குதலையும் மறந்து குங்குலியத்தை விலைக்கு வாங்கிக் கோயிலுட் சென்று நறுந்தூபமிட்டாரென்றும் பெரியபுராணத்தில் அறிகிறோம். இந் நாயன்மார்கள் அன்புப்பணியில் இன்பம் கண்டனர். இறைவனிடத்தும் அடியார்களிடத்தும் வைத்த பேரன்பு காரணமாக இவ்வாறு செய்யும் தொண்டுகள் மெல்வினைகள் எனப்படும். இம்மெல் வினைகள் பார்ப்போர்க்கு எளியனவும் இனியனவுமாயிருத்தலால் இப்பெயர் பெற்றன. பல பிறவிகளிலும் மெல்வினைகள் பலவும் இயற்றி அன்பெனும் புணையை நன்கிறுகப் பற்றி நிற்போர் மறு பிறவிகளில் அந்த அன்பின் முதிர்ச்சியால் கண்டார்க்கு அரியனவான செயல்களைச் செய்யவும் வல்லவராவார். சிவனடியாரை அமுது செய்வித்தற் பொருட்டுத் தமது மகனை அரிந்து கறி சமைத்த சிறுத்தொண்டர் செயலும், சிவபூசைக்கு வைத்த பாற்குடத்தைக் காலால் எற்றிய தம் தந்தையைத் தண்டித்த சண்டீசர் செயலும் செய்தற் கரிய செயல்களாம். இது,

"வரங்கள் தரும் செய்ய வைரவர்க்குத் தங்கள்
கரங்களினால் அன்றுகறி யாக்க - இரங்காதே
கொல்வினையே செய்யும் கொடுவினையே ஆனவற்றை
வல்வினையே என்றதுநான் மற்று"

"பாதகமேயென்றும் பழியென்றும் பாராதே
தாதையை வேதியனைத் தாளிரண்டும் - சேதிப்பக்
கண்டீசர் தாமாம் பரிசளித்தார் கண்டாயே
சண்டீசர் தம்செயலாற் றான்,"

என்னும் திருக்களிற்றுப்படியாரிலுள்ள திருச் செய்யுள்களால் அறியப்படும்.

**அருள் வெளிப்பாடு**

சிவநேயம் முதிர முதிர முன்னர் மெல்வினையும் பின்னர் வல்வினையும் ஆற்றவல்ல பெரியோர்கள், உலகியலாரை நோக்க ஆன்ம வளர்ச்சியில் இறப்பப் பெரியோராயினும், சிவஞானம் கைவரப் பெற்ற சீவன் முத்தரல்லர், இவர்கள் உள்ளத்தில் தம் நினைவற்றுச் சிவ நினைவே தழைத்திருத்தலை உயிர்கள் தோறும் ஒளித்திருக்கும் இறைவன் உள்ளவாறே அறிவன்.

**"அகத்துறு நோய்க்கு உள்ளினர் அன்றிச்**
**சகத்தவரும் காண்பரோ தான்."**

என்றபடி உலகத்தவரால் அறிந்துணர முடியாத அவ்வடியார்களது பக்குவத்தினையறிந்து அவர்க்கு அருள் செய்யும் பொருட்டு இறைவனே மானிடச் சட்டை சாத்தி நேர்முகமாகத் தோன்றுவன்.

**செயலறுதல்**

ஆன்மாவானது அஞ்ஞானத்தினால் மயங்கி ஆசை வழிச் சென்று தன்னையும் தன் சூழலையும் நினைந்து இடையறாது தொழிற்படுகின்றது. பின்னர் அதன் பின் வழிநின்று சிவனையும் சிவனடியார்களையும் கனவிலும் நனவிலும் மறவாது, அன்பர்கட்குச் செய்யும் தொண்டே தொழிலாக அவர்பால் வைத்த அன்பே இன்பமாக அமைகின்றது. ஆசைநிலை, அன்புநிலை ஆகிய இவ்விரு நிலையிலும் ஆன்மாவின் வினை முனைப்பு அடங்குவதில்லை. வினை செய்வதற்கான முனைப்பு அடங்குவதற்குச் சிவஞானம் கைவரப் பெறல் வேண்டும். சிவஞானம் கைவருதற்குத் திருவருள் குருவடிவாய் வந்து நயனம், பரிசம் முதலிய தீக்ஷை களால் அஞ்ஞானத்தைப் போக்கி ஆன்மாவைச் சிவமாக்க வேண்டும். சிவாநுபூதியை யெய்தியவர்க் கன்றி ஏனையோர்க்குச் செயலற்ற நிலை கூடப்பெறாது.

**சிவாநுபூதி**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் திருவருளால் ஆட்கொள்ளப்பட்டுத் தம் செயலற்றவர் களாவர். அவர்கள், முற்கூறப்பட்ட இளையான்குடி மாறர் முதலிய மெய்யடியார் போல் பக்தி வசப்பட்டுப் பணி செய்தவரல்லர். திருவருள் வரப்பட்டு சீவன் முத்தர்களானவர்களே. அவர்களுடைய கரணங்களெல் லாம் பசுகரண மாந்தன்மை யொழிந்து சிவகரண மாந்தன்மை யெய்தினமையால் அவர்களிடமிருந்து நிகழ்ந்த செய்கைகளெல்லாம் அருட் செயல்களென் றும் அவர் வாக்கினின் றெழுந்தவையெல்லாம் அருள் வாக்குகள் என்றும் கருதப்படும். இது,

**பாலைநெய்தல் பாடியதும் பாம்பொழியப் பாடியதும்**
**காலனையன் றேவிக் கராங்கொண்ட - பாலன்**
**மரணம் தவிர்த்ததுவும் மற்றவர்க்கு நந்தம்**
**கரணம்போ லல்லாமை காண்.**

என்னும் திருக்களிற்றுப் படியாரிலுள்ள திருவெண் பாவாலறியப்படும்.

பெரிய புராணத்துட் கூறப்பட்ட ஆளுடைய பிள்ளையார் முதலிய மூவரும் சித்தமலமற்றுச் சிவ மாந் தன்மையெய்தி நின்றனராயினும் அந் நிலை பெறாத ஏனையோர் போலத் தாமும் சரியை முதலிய நெறி நின்று வழிகாட்டியருளினார். சீவன் முத்தர்க்கும் ஆலய வழிபாடு உண்டு என்பது,

**செம்மலர் நோன்றாள் சேர லொட்டா**
**அம்மலங் கழீஇ அன்பரொடு மரீஇ**
**மாலறநேயமும் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந்தானும் அரனெனத் தொழுமே**

என்னும் சிவஞானபோதத்து இறுதிச்சூத்திரத்தால் தெளியப்படும். தேவாரம் பாடிய செல்வர்களாகிய மூவரும் சிவஞானம் பெற்றவளவில் சமாதி நிலை கைகூடப்பெறாது, சைவம் பரக்கவும் நீறு தழைக்கவும், தொண்டு சிறக்கவும் திருத்தொண்டத் தொகை பிறக்கவும் காரணராய், தமிழ் நாட்டிலுள்ள சைவத் தலங்கடோறும் சென்று சைவநன் மக்களிடத்தே சிவ பக்திப் பயிரை வளர்த்தனர். இதனால் அவர்கள் சைவ சமயக் குரவர் என்றும் போற்றப்படலாயினர்.

இதுகாறும் கூறியவாற்றல், மக்கள் மாக்களாகாமல் மாண்பெய்துவதற்கு வழிகாட்டியாக இலக்கியங்கள் இருத்தல் போல, மக்கள் அன்பு வழி நின்று இன்ப நிலையெய்துவதற்கு உற்ற துணையாகப் பெரிய புராணம் உள்ளதென்பதும், இதன் கண் கூறப்படும் அடியார்கள் குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்து நின்று வாழ்வு நடத்தினார்கள் என்பதும், அவர்களின் அன்புச் செயல்கள் மெல்வினையென்றும் வல்வினையென்றும் இருதிறத்தனவென்பதும், அவ்வித அன்பு நிலையில் மேம்பாடுற்றமை கண்டு இறைவன் அத்தகையோர்க் குக் குருவடிவாய் வந்து சிவஞானத்தை அருள்வானென் பதும், அவ்வாறு ஆட்கொள்ளப்பட்டுச் சிவஞானமெய் தியவர்களே ஆளுடையபிள்ளையார் முதலானார் என்பதும், அவர்கள் தம் செயல் நீங்கிச் சிவன் செயலால் நின்றவர் என்பதும், அவ்வருளாளர்களின் அவதானத் தினால் சைவமும் சிவநேயமும் தழைத்தன என்பதும் கூறப்பட்டன.

# சுவாமிகளின் மகத்தான நிலையை வெளிப்படுத்தும் எங்கள் ஆசான் அருள்மொழிகள்

**சென்ற இதழ் தொடர்ச்சி**

**பகுதி III (அமரர் சிறிகாந்தா அவர்களுக்கு அருளியது)**

அமரர் சிறிகாந்தா அவர்கள் சுவாமிகளைத் தெய்வமாகக் கொண்டாடிய கஸ்தூரியார் குடுபத்தில் பிறந்து வளர்ந்தவர். சிறுவயது முதல் சுவாமிகளைத் தரிசித்துத் தொழும்பு செய்து வந்தவர். அவர் சுவாமிகளின் தரிசனம் தமக்கு இறைஞானத்தை அருளும் என நம்பி வாழ்ந்தார்.அரச அதிபர் ஆதிய உயர்பதவிகளை வகித்துச் சமூகத்தோடு ஒன்றி வாழ்ந்த அவர் சுவாமி தரிசனமே தமக்கு ஆத்ம லாபத்தைத் தருமெனத் திடமாக நம்பினார்.

சுவாமிகள் அவரது நம்பிக்கையை உறுதிப்படுத் தினார். தான் தெய்வாம்சமாக உள்ளமையை அவருக்குத் தெரியச்செய்தார்.தெய்வ உணர்வுடன் சமூகத்தோடு ஒட்டிவாழும் வழியைக் காட்டினார்

1. அடியாருறவு இறைஞானத்தை உணர்த்தும் எனக்கூறி சிறிகாந்தா அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்திய அடக்கமான வாசகம்

" நீங்கள் என்னைக் காணக் கூடியதாக இருக்கிறது. இறைவன் அறிய முடியாதவர்.அவரின் அரும்பெரும் அடியார்கள் மூலமாகவே அவரை அறியலாம்"

2. சுவாமிகள் சிவாம்சமாயுள்ளார் என்பதை உணர்த்தும் மொழி

" எனக்கு எத்தெய்வத்தின் உதவியும் தேவையாகாது. கடவுள் இருக்கிறார் நாங்கள் இருக்கிறோம். கடவுளின் அம்சமாகவே யான் பரிணமித்துள்ளேன்."

3. (அ) யாவையுமாய் அல்லையுமாய் இருக்கும் இறையியல்பைச்சுவாமிகள் தம்மிடம் வெளிப்படுத்திய திறவுகோல் மொழி

"என்னையன்றி ஒன்றுமில்லை.
ஆனால் ஒன்றும் யானல்லேன்"

(ஆ) உலகத்துக்கு ஏகசக்கராதிபதியாயிருக்கும் சுவாமிகள் மாகாணத்துக்கு அரச அதிபராய் இருக்கும் சிறிகாந்தா அவர்களது உள்ளிருந்து இயக்கும் இரகசியத்தை உளவறிந்து கொள்வதற்காக அருளிய திறவுகோல் மொழி.

"உளவறிந்து எல்லாம் என்செயல் என்றறிவார்க்கு
அளவிலா ஆனந்தம் நல்குவன் யான்"

(இ) சுவாமிகள் பிறப்பில்லா இறைவனின் சிறப்பைத் தன்னில் உணர்த்திய வண்ணம்

"ஒன்றும் நடக்கவில்லை. நீயும் பிறந்ததில்லை. யானும் பிறந்ததில்லை. இவையெல்லாம் ஓர் கனவேயாகும்"

4. இறையுணர்வுடன் உலகத்தோடு ஒட்டி வாழும் வண்ணத்தைக் கூறும் அருள்மொழிகள்.

"உலகம் ஆசைவயத்தது.உலகில் நிகழும் இன்ப துன்பங்களை மெய்யென எண்ணி வாழ்பவர்கள் நீங்கள். அவற்றையும் இவ்வுடலையும் மெய்யெனக் கருதாது வாழ்பவன்யான். இதுவே எனக்கும் உங்களுக்கும் உள்ள வேற்றுமையாகும். இந்த எண்ணத்தோடு பொருந்திய வண்ணம் பூமியில் வாழ்கிறேன்."

"நாங்கள் நித்தியர். தரும் நியாயங்களும் எங்களைக் கட்டுப்படுத்தா. ஆயினும் சமூகவாசிகளான படியால் இவைகளும் இன்று தேவையாகும்."

**பகுதி VI ( சந்த சுவாமிகளுக்கு அருளியது)**

சந்த சுவாமிகள் விவிலியவேதம், திரிபிடகம், குர்ஆன், உபநிடதம் எனும் வேதநூல்கள் அனைத்தையும் கற்றவர். இக்கல்வியின் பயன் தன்னை அறிதலே எனத் தேர்ந்து கொண்டவர். தன்னை யறிதற்கு தக்கவழி தன்னையறிந்த ஞானி ஒருவரை அண்டி வாழ்தலே என்ற தெளிவு பெற்றவர். இத்தெளிவு டனேயே அவர் சுவாமிகளைத் தஞ்சமடைந்தார். தன்னையறியும் தாகத்துடன் தம்மைச் சரணடைந்த சந்தசுவாமிகளுக்குச் சுவாமிகள் தன்னில் தானான தன்மயத்தின் அம்சங்களையெல்லாம் நுணுக்கமாகக் காட்டி வைத்தனர்

அவ்வமிசங்களாவன.

1. சுவாமிகள் பிரமத்தில் நிலைத்திருப்பவர்
2. தன்னையும் பிறரையும் தெய்வமாகக் காண்பவர். தெய்வத்திற்கு அயலாக அவர் எவரையும் அறிந்ததில்லை.
3. சுவாமிகள் முழுதுமாய் இருப்பவர்.

4. சுவாமிகள் சந்த சுவாமிகளைத் தானாகவே கருதினார்.
5. சுவாமிகள் முழுதுமாய் ஒன்றிச் சுகிப்பவர்
6. சுவாமிகள் எல்லோருடனும் கூடியிருந்து பாடுபடுகிறார்.
7. சுவாமிகள் சந்த சுவாமிகளுடனும் கூடி நின்று அவரும் தன்னை அறிந்து சுகிக்கவேண்டும் என்பதற்காகச் சேவகம் செய்கிறார்

1. சுவாமிகள் தாம் பிரமத்தில் நிலைத்திருப்பவர் என்பதை உணர்த்தும் அருள்மொழி

"நானே வெளிக் கொணர்தல். நானே நிலைத்தல். நானே அழிதல். இவையெல்லாம் பிரமத்தில் உள்ளன. பிரமமும் நானே."

2. சுவாமிகள் தாம் தெய்வமாக உள்ளேன் என்பதையும் தெய்வத்திற்கு அயலாக யாதொன்றையும் அறியாதவர் என்பதையும், அதனால் எல்லோரையும் தெய்வமாக காண்பதையும் உணர்த்தும் தெய்வத்தன்மையுடைய மொழிகள்

"நான் தெய்வத்தை எங்கும் காண்கின்றேன். நான் எவ்விடத்தும் வணங்குகின்றேன். எல்லோருந் தெய்வமே. நான் அறியேனாகையால் இவ்வண்ணம் சொல்ல முடியும்"

"ஏன் அறிய விரும்புகிறாய்? நான் அறியேன். நானும் மற்றவர்கள் போலவே. அவர்கள் எல்லோரும் அனுபூதிமான்களே. ஆனால் அவர்களுக்கு அது தெரியாது அந்தச் சிறு வித்தியாசம் மட்டுமே உள்ளது."

"நான் அறியேன்"

3. சுவாமிகள் முழுதுமாய் இருப்பவர் என்பதை உணர்த்தும் மொழிகள்.

"நான் முழு உலகமுமாகும்"
"நான் எல்லோருள்ளும் இருக்கிறேன்".
"எல்லா வடிவங்களும் என்னுடையனவே"
"நான் எல்லாமாய் ஓரிடத்தில் இருக்கமுடியாது. ஆதலின் ஒருவர் காலை எடுக்கிறார் ஒருவர் கண்ணை, ஒருவர் கையை அவ்விதமே"
"நான் எல்லாவற்றிலும் உள்ளேன். எல்லா வடிவங்களும் எனதே"

ஒருவர் வந்தார். "நீ எங்கே வசிக்கிறாய்? எனச் சுவாமி கேட்டார். அவர் முல்லைத்தீவு என்று சொன்னார். நானும் முல்லைத் தீவில்தான் வசிக்கிறேன் என்றார் சுவாமி."

4. சுவாமிகள் சந்த சுவாமிகளிடம் நாம் தெய்வத்துள் வைக்கபட்ட ஒரே ஆள் எனக் கூறிய மொழிகள்.

"நானே நீயும் நீயே நானும்"
"நான் எப்போதும் உன்னுடன் இருக்கிறேன்:
"நீ தெய்வம். தெய்வம் உன்னுடன் இருக்கிறது"
"நீ தெய்வம். நான் தெய்வம். ஒன்றேயொன்று மட்டுமே. பிரிவில்லை. உன்னிலிருந்து என்னைப் பிரிக்கமுடியாது"
"நான் அலைகள். நான் சமுத்திரம். நாம் எல்லோரும் அலைகளே. பெரியஅலை சிறிய அலை என்றில்லை. அலைகளுஞ் சமுத்திரமும் ஒன்றே. நீ சமுத்திரத்தினுள் மூழ்கவேண்டும்."

5. சுவாமிகள் சிவத்துடன் ஒன்றித் தன்னில்தானே சிவானந்தம் அனுபவிக்கின்றார் என்பதைக் கூறும் அருள்மொழி.

"நானே முழுவதும் நானே பகுதியும். பகுதி ஆத்மா (சீவாத்மா) ஆகும். முழுவதும் சிவம்.
இரண்டிற்குமிடையே திருமணம்."

6. சுவாமிகள் எல்லோரிலும் மறைந்திருந்து எல்லாரது நலத்துக்காகவும் கருமமாற்றுகிறார் என்பதைக் கூறும் அருள்அமாழி

" நான் எல்லாரினதும் சேவகன். ஆனால் அதை நான் காட்டிக்கொள்வதில்லை".

7. சுவாமிகள் சந்த சுவாமிகளுடன் ஒன்றியிருந்து அவர் நலனுக்காக பாடுபடுகிறார் என்பதை உணர்த்திய மொழி

" நீ சமைக்கும்போது நான் உன்னுடன் சேர்ந்து சமைக்கிறேன். நீ நடக்கும்போது நான் உன்னுடன் சேர்ந்து நடக்கிறேன். நான் உன்னுடன் உள்ளேன். ஏனெனில் ஒருவனே உளன். "

# எள்ளத்தனையும் மறவாது ஏத்துதல்

## 1. உள்ளத்திலுள்ளே உலாவும் ஒருவன்

இறைவன் உள்ளத்தில் உறைகின்றான் எனப் பெரியோர் பலரும் கூறியிருக்கின்றனர். அவன் உள்ளே உயிருக்கு உயிராக உள்ளான்; இதய வெளியிலே பொது நடம் புரிகின்றான்; அகச்சோதியாய் ஒளிர்கின்றான். செஞ்ஞாயிற்றை ஒத்து உள்ளத்தில் ஒளிர்ந்து அஞ்ஞான இருளை நீக்குகின்றான். சித்தத்துள்ளே தித்தித்திருக் கின்றான்; உள்ளத்தில் ஓங்காரமாய் நின்று உய்விக்கின் றான்; சிறந்த அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று பிறந்த பிறப்பறுக்கின்றான் என்றெல்லாம் தாம் அனுபவித்த வண்ணம் விவரமாக எடுத்துரைக் கின்றனர். அவ்வாறு கூறியவற்றுள் இன்னொன்று உள்ளத்தினுள்ளே உலாவும் ஒருவன் என்பது.

உள்ளத்திலே உலாவுதலிலும் பல வண்ணங்கள் உள்ளன. செல்லப்பரைப் போன்று சிங்காரமான நடையும் சிரிப்புமாக உல்லாசமாய் உலவுதல் ஒன்று. செல்லப்பர் பாரறியாத பைத்தியக்காரனாய் உலவுதல் போல இறைவனும் உள்ளத்தின் சேட்டைகளை அறியாதவர் போன்று உள்ளத்தினுள்ளே உலவுகிறார். இறைவன் உள்ளத்தின் நீசநினைவுகளை அறியார் என்ற அறியாமையுடையோர் மனம்போனபோக்கில் எண்ணுவதெல்லாம் எண்ணித் தீர்ப்பர். இறைவன் எண்ணும் எண்ணமெல்லாம் அறிந்துகொண்டு உள்ளத் தினுள்ளே உலவுகின்றார் என்பதை அறிந்தோரோ அழுக்கு நினைவுகளை நினையப் பெரிதும் நாணுவர். நந்தியம்பெருமான் கைலாயத்து வாயிலில் பிரம்புடன் உலாவுதல் போலவும் பெருமான் உலவுவார். நந்திதேவரின் காவலைமீறி பிரமவிட்டுணுக்களும் கைலாசத்துள் புக நினையார். அவ்வாறே இறைவன் உள்ளத்தினுள்ளே காக்கும் காவலனாக உள்ளார் என்ற அச்சமிருக்குமாயின் அயல் நினைவுகள் அகத்தினுள்ளே புகா. அவ்வாறு புகுந்தால் புளியம் வளாறினால் அடி விழும்; "காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் கரைநின்றவர் காண்மின்" என்று ஆழமான பள்ளநீரில் தூக்கி எறிந்து விடுவார். இறைவன் விழாக்காலங்களில் வீதியில் உலாவருதல் போன்று உள்ளத்தில் உலாவுதலுமுண்டு. இதுவே மிகச் சிறந்த உலாவுதல். முந்திய உலாக்களில் அஞ்சுதலினால் உள்ளம் அயல் நினைவுகளை நினையாதிருக்கும். இறைவன் தன் சுந்தரக் கோலத்துடன் உலாவருதலைக் கண்டாலோ அன்புபட்டு அயல் நினைவுகளை மறந்து இறைவனொ ருவனையே நினைக்கும். அவ்வாறு கண்டாரெவரும் காதலிக்கும் வண்ணமாக அவனது உலாத் திகழும். அங்கும் இங்கும் பாராத வண்ணம் அகத்திலே ஆடல் காட்டிப் பொங்கும் இன்பம் தருவது இந்தச் சிங்கார மான உலா.

## 2. எள்ளத்தனையும் மறவாது ஏத்துதல்

இறை நினைவை மறப்பது அயல்நினைவுகளா லேயே. இந்நினைவுகள் வெளிக்கதவுகளைத் திறந்து புறத்தே அலையச் செய்கின்றன. உட்கதவைத் திறந்து உள்ளகத்து நாயகனார் சீரைப் பார்த்து சிறந்தினி திருப்பதை விட்டு ஊர்ப்புதினங்களைப் பார்த்து சீரழியச் செய்கின்றன. அயல் நினைவுகளில் அநேக மானவை ஒரு காசுக்கும் பெறுமதியில்லாதவை. முப்பது வருடங்களுக்கு முந்திய நினைவுகளால் என்ன பிரயோ சனம்? ஒருபொழுதும் வாழ்வதறியாது முப்பது வருடங் களுக்குப் பின் நிகழப்போவதை மனக்கோட்டை கட்டுவதால் யாது பயன்? அயலவனது வாழ்வு தாழ்வு என்பவற்றை நினைந்து அழுக்காறு, அற்ப திருப்தி கொள்வது எவ்வளவு அருவருப்பானது. இவ்வாறான நினைவுக் குப்பைகளே உள்ளேயுள்ள இறைவனை நினைந்திருக்கும் நல்ல நினைவுகளை மறக்கச் செய் கின்றன. உள்ளத்தினுள்ளே காக்கும் காவலன் விழிப் புடன் உலவுகின்றான் என்றும் அவனது காவலை மதி யாது அயல் நினைவுகளில் சென்று அலைந்தால் அவதியுற நேரிடும் என்றும் அஞ்சி அயல் நினைவுகளை அறவே மறந்து விடுதலே அழகியது. அதனால் அகத்தே நினைந்திருக்கும் நமது உண்மைச் சுபாவத்தை மறக்கச் செய்யும் மறதி ஏற்படாது. அகத்தே பெருமானது சுந்தர வண்ணங்களைக் கண்டால் காந்தத்தால் ஈர்ப்புண்டு செல்லும் இரும்பு போன்று நினைவுகள் பெருமா னையே பற்றி நிற்கும். இவ்வாறு பற்றி நிற்கும் நினைவு தேனாய் இன்னமுதமாய்த் தித்தித்திருக்கும். அந்தச் சுக நினைவை எள்ளவும் மறவாது சதா நினைந்திருத்தலே நமது சுபாவம். பெருமான் கணப்பொழுதும் மறவாது நம்மை நினைந்திருக்க, நமக்கு நினைவூட்டிக் கொண்

டிருக்க, நினைவு தோன்றுமிடத்தில் நினைவுக்கு வித்தாக இருக்க நம்மால் எவ்வாறு அவரை எள்ளளவேனும் மறத்தலியலும்.

**பள்ளத்தில் வீழ்ந்து பரிதவியோம்**

உள்ளத்தினுள்ளே உலாவும் ஒருவனை எள்ளத் தனையும் மறவாது ஏத்தினால் பள்ளத்தில் வீழ்ந்து பரிதவிக்கமாட்டோம். உலக வாழ்விலும் குன்றில் முட்டிக் குழியில் வீழ்ந்து துயரப்படமாட்டோம். உலக வாழ்வை நீத்த பின்னும் பிறவிப்படுகுழியில் மீளவும் வீழ்ந்து துன்புறவும் மாட்டோம். மறவாது நினைந்திருப் போரைக்,

காலனும் அணுகான் கருமமும் அணுகா
ஆல முண்ட கண்டன் ஆணையே.
என்று சுவாமி ஆணையிட்டுரைக்கின்றார்.

**உள்ளத்தைச் சொன்னோம். உயிர்த்துணையிதுவே**

சுவாமிகள் செல்லப்பதேசிகரோடு கூடிவாழ்ந்த அறிவினாலும், சாத்திர நூல்களைக் கற்றறிந்த ஞானத் தினாலும், சொந்த அனுபவத்தில் தெளிந்து கொண்ட மெய்யுணர்வினாலேயுமே இந்த உண்மையைத் தெளி வாக வெளிப்படுத்தியிருக்கிறார். இதனை அடக்கமாகச் சொல்லும் அவரது வாய்மொழியே உள்ளத்தைச் சொன்னோம் என்னும் மெய்ம்மொழி.

உயிருக்குத் தானம், தவம், சமய ஆசாரங்கள் ஆகிய இவையெல்லாம் நித்தியமான துணையல்ல. இந்த இறைவனை மறவாது நினைந்திருக்கும் நற்சிந்தனையே உயிர்த்துணையாகும். இதனைச் சுவாமிகள் ஓம் தத் சத் ஓம் என நிறைவுறும் ஓர் மந்திரத்துடன் கூறும் ஓர் திருமந்திரமாக எமக்கு ஓதி இருக்கிறார்.

உள்ளத்தினுள்ளே உலாவும் ஒருவனை,
எள்ளத் தனையும் மறவா தேத்தினால்
பள்ளத்தில் வீழ்ந்து பரிதவி யோமே
உள்ளத்தைச் சொன்னோம் உயிர்த்துணை இதுவே
ஓதுக அதுநாம் ஓம்தத் சத் ஓம்.

## உன்னை மறந்தொரு கணமும் வாழேன்

சிதம்பர தரிசனம் காட்டியே சிவ
பதமலர் சூட்டிய பரம குருவே - சிதம்பர

நிதமு முன்னாமம் நினைந்திடச் செய்தே
இதய நடமிடும் என்னருட் குருவே - சிதம்பர

பதமொன்றும் வேண்டேன் பணிந்திடல் வேண்டும்
பதமலர் நாளும்நான் பாடி யாடியே - சிதம்பர

அன்னையிற் பெரிதும் அன்புடை அரசே
உன்னை மறந்தொரு கணமும் வாழேன் - சிதம்பர

என்னை இங்கினும் இடர்பட விடாமல்
மன்னா மாதவா மாறா தருள்வாய் - சிதம்பர

பொன்னம் பலத்துப் புனிதனும் நீயே
மன்னிய கலம்பக வாசனும் நீயே - சிதம்பர

துன்னிய மருள்கெடத் தூக்கிய திருவடி
சென்னியில் வைத்தெனை யாளுவ தென்றோ - சிதம்பர

பட்டது போதும் பரம சுகம் பெற
அட்டனே ஆண்டருள் அரகர சிவசிவ - சிதம்பர

– சிவ சிந்தனை

# இறையருள்

கடவுள் நம்பிக்கையும் வழிபாடும் உடையவர் தம்வாழ்வில் இறையருள் தேவை என்பதையும் அதனைப் பெறத் தாம் முயலவேண்டும் என்பதையும் நன்கு அறிந்திருக்கின்றனர். இவர்கள் தினமும் காலை மாலையில் கடவுள் வணக்கத்தைச் செய்பவர்களா கவும். சந்தர்ப்பமும் தேவையும் உள்ளபோது ஆலயவழிபாடு செய்பவர்களாகவும் உள்ளனர்.

இப்படிப்பட்டவர்கள் தம் தேவை-குறை - இறையருளின் அருமை பெருமைகள் பற்றித் தெளிவான அறிவும் தேவையான அனுபவமும் இல்லாமல் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

மிக அதிகமானவர்கள் காலை மாலையில் மிகச் சில கணங்களே கடவுளை நினைக்கின்றனர், வணங்கு கின்றனர். இதேபோல ஆலய வழிபாட்டின் போதும் அருச்சகர் மூலம் அருச்சனை செய்யும் போது தமக்குவேண்டியவர், உறவினர்களின் பெயர், நட்சத்திரம் சொல்வதால் அவர்கட்கெல்லாம் பூரண அருள்கிடைக்கும் என நம்புகின்றனர். இவ்விடயத்தில் அறிவுபூர்வ சிந்தனை தேவை.

தேவர் - அசுரர் மட்டுமன்றி மனிதருள்ளும் வெளிப்படையாகக் கடவுள் அருள் பெற்று சிறந்தவர் எவ்வளவு அதிக முயற்சியும் ஈடுபாடும் கொண்டு தளராது முயன்றனர் என்பதை அறியும் நிலையில் இவர்களது வழிபாடு, அருச்சனை என்பன தேவைக்கு போதுமானதாக இருக்கும் எனத் தீர்மானிக்க ஒரு சிறிதும் வாய்ப்பு இல்லை.

அவுணர் தேவர் மட்டுமன்றி முனிவர்கள் அம்பிகை போன்றோர் விரதமிருந்து, தவம்புரிந்து அருள்பெற்ற வரலாறுகள் உள்ளன. விளையாட்டாக சிவ பெருமானின் கண்களை மூடியபாவத்துக்காக அம்பிகை சிவபூசை செய்த வரலாறு உண்டு. அம்பிகை அரைமணிநேரம் முக்கால் மணிநேரம் சிரமப்படாமல் பூசித்து அருள் பெற்றதாக இல்லை.

முகுந்தன் - சிபிச்சக்கரவர்த்தி - நாரதர் முருக விரதமிருந்து அருள்பெற்ற செய்திகளை கந்த புராணத்து கதவிரதப் படலம் தெளிவாகக் கூறுகின்றது.

இக்காலத்தில் தினமும் வீட்டில் காலை மாலை வழிபடுவோர். "அரை நிமிட நேரமட்டில் தவமுறைதியானம் வைக்காத" வழிபாட்டினையே செய்கின்றனர்.

ஆலயங்களிலோவென்றால் ஒருதேவை - ஒரு துன்பம் குறித்து வழிபடச் சென்றவர் அருச்சனை செய்யும் போது உறவினர் அயல்வீட்டார், நண்பர் எனத்தம் ஞாபகத்துக்கு வரும் அனைவர் பெயராலும் அருச்சனை செய்கின்றனர். இந்த அருச்சனை செய்விப்போர் - செய்பவர் எனும் இருபிரிவினரும் எடுக்கும் நேரம் பணம் என்பவற்றின் அளவைப் பார்த்தால் அவர்கள் பெறும் அருளின் அளவைக் காணலாம். இவ்வளவு குறைவானநேரம், பொருள், முயற்சி என்பவற்றால் விரும்பும் பயன் எவ்வளவு? நாளொன்றிற்கு 1/2 மணி வீதம். சிலநாள் கல்வியால் - டாக்டர் இன்ஜினியர் ஆகலாம் என்பது போன்ற இவர்கள் வழிபாட்டால் அனைவரும் அருள்பெற்று விடலாம் என்பதை விடுத்து - அறிவுபூர்வமாக நேர்மையான முயற்சியால் இறையருள் பெற்றுச் சிறக்க விரும்புவதே நியாயமானதாகும்.

## முல்லாவின் கடவுள் நம்பிக்கை

முல்லா நஸ்ருதீனும் அவரது பாரியாரும் ஒரு தடவை ஓர் ஆற்றைக் கடந்து மறுகரைக்குச் செல்லவேண்டி இருந்தது. அந்த ஆறு மிக விசாலமானதும் ஆழமானதுமாக இருந்தது. அவர்களோடு வேறும் சிலரும் மறுகரைக்குச் செல்வதற்காய் படகோட்டி தனது படகோடு வரும் வரை காத்திருந்தனர். சில நிமிடங்களில் படகோட்டி தனது படகுடன் வந்து சேர்ந்தான். எல்லோரும் படகிலே ஏறி அக்கரை சேரப் புறப்பட்டார்கள். படகு ஆற்றின் நடுப் பகுதியை அண்மித்துக் கொண்டிருந்த வேளை பெரும்புயற் காற்று வர ஆரம்பித்தது. அது ஓரிரு நிமிடங்களிலே மிக உக்கிரம் அடைந்தது. படகு ஆட்களுடன் சுழன்று ஆடியது. எல்லோரும் தம்மைக் காப்பாற்றுமாறு இறைவனை வேண்டினர், தொழுதனர். ஆனால் முல்லா சிரித்தபடி புயலை ரசித்துக் கொண்டிருந்தார். அவரது மனைவி அவரையும் இறைவனை வேண்டித் தொழும்படி கேட்டாள். முல்லாவோ தனது பையை அவிழ்த்து அதனுள்ளிருந்து ஒரு கத்தியை எடுத்து அவளது கழுத்தைத் துண்டிப்பார் போல அதனை அவளை நோக்கி வீசத் தொடங்கினார். அவள் அதற்குச் சிரித்தாள். முல்லா "ஏன் சிரிக்கிறாய் சாக அல்லவா போகிறாய்" என்றார். அதற்கு அவள் நீங்கள் என்னைக் கொல்ல மாட்டீர்கள் என்று எனக்கு நம்பிக்கை உண்டு. முல்லா அதுபோலவே கடவுளும் எம்மை மூழ்கடிக்கார் என்று எனக்கு நம்பிக்கை உண்டு என்றார்.



# சிவதொண்டன்

ஏவிளம்பி ஞூ ஐப்பசி - கார்த்திகை (2017 நவம்பர் - டிசெம்பர்)
இதழ் (11-12)

## மறவாதவன்

நற்சிந்தனைத் திருநூலின் இறுதியில் திருமுகங்கள் என்ற தலைப்பில் ஒரு பகுதி உளது. இத்திருமுகங்களில் ஆறு திருமுகங்களுக்கு **என்றும் மறவாதவன்** என்ற கையெழுத்து இடப்பட்டிருக்கிறது. ஒரு திருமுகத்திற்கு ஒரு நாளும்மறவா யோகசுவாமி என்ற கையெழுத்துளது. சுவாமிகள் இக்கையெழுத்துக்களினாலே தாமும் தமது குருபரனைப் போன்று திருவடிமறவாச் சீருடையாளன் எனப் பொறித்து வைத்திருக்கிறார் எனக் கொள்வதே பொருத்தமானது.

நற்சிந்தனைத் திருநூலின் பாடற்பகுதி, உரைநடைப் பகுதி என்பவற்றிலும் மறவாமை பலவிடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாடல்களிலே **எள்ளத்தனையும் மறவாது, தினைத்தனைப்போதும் மறவாது, கணப்பொழுதும் மறவாது, மறவாமல் போற்றும் மாதவர்** என அடுத்தடுத்து வருகின்றது. உரைப் பகுதியிலே மறவாமைக்கான அடிப்படையைக் குறிப்பிட்டு மறவாதிருப்பதே நமது சுபாவம் எனக் கூறும் ஒரு பகுதி உளது.

"நமது உயிருக்குயிராயிருப்பவர் கடவுளே
ஆகையால்......
நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது."

நமது உயிருக்கு உயர்ப்பளித்து உயிர்ப்பாய் புறம் வந்தும் உட்புகுந்தும் உயிருக்குயிராய் விளங்கும் இறைவனை உயிருள்ளவரை எவ்வாறு மறத்தலியலும்? எண்ணந் தோன்றுமிடத்தில் எண்ணத்திற்கு வித்தாய் இருக்கும் இறைவனை எண்ணம் எவ்வாறு மறத்தலியலும்? ஆதலால் நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது. நமது உயிர் தரித்திருப்பதற்கு ஆதாரமாயிருப்பவர் அவரே. ஆதலால் அவரை மறந்து உயிர் தரித்திருக்க முடியாது. ஆதலாலேதான் அறிவாளிகள் "உன்னை மறந்தொருகணமும் வாழேன்" என்றும் "உன்னை மறப்பேனோ உயிர் நான்தரிப்பேனோ" என்றும் ஓலமிடுகின்றனர். அவர்கள் கணப்பொழுது மறக்க நேரிடினும் 'பெருநீரறச் சிறுமீன் துவண்டாங்கு' துடிதுடிக்கின்றனர். நீரில் வாழும் மீன் நீரிற் பிரிந்து எவ்வாறு வாழும்? கடவுளில் வாழும் நாம் கடவுளை மறந்து எவ்வாறு வாழ்வது?

அவ்வாறு வாழின் அது நமது இயல்பு நிலையினின்றும் இழிந்து பிறவாய் ஈனமுற்றுப் போகும் ஈனப்பிறவியேயாகும். இவ்விடத்தில் பிறவி என்பதற்கு எமது இயல்புநிலையிலிருந்து பிறவாய் இழிந்த நிலை எனப் பொருள் கொள்வதும் பொருந்தும் போலும். நாம் நமது ஆத்மநாதரை மறவாதிருக்கும் ஆன்மாவாக இருப்பதே நமது சொந்தநிலை. அதனை மறந்தால் பிறவிக்கடலிற் பட்டுத் திக்குமுக்குப்படுகின்றோம். ஆன்மா நாம் எனும் அறிவை மறத்தலே பிறப்பு என்பதைச் சுவாமிகள் மிகத் தெளிவாகப் பாடுகின்றார்.

"ஆன்மா நித்தியம் ஆன பொருளென
ஆசான் சொல்லக் கேட்டிருந்தோம்
அதையே மறந்தோம் பிறந்தோம்....."

சுவாமிகள் ஆன்மாவே நாம் எனும்அறிவை மறவாதவர். ஆதலால் அவருக்குப் பிறவியுமில்லை, பிறவியில்லாததால் இறப்பும் இல்லை. ஆதலாலேதான் இன்னொரு திருமுகத்திற்குப் பிறவாதவன் இறவாதவன் என்று கையெழுத்திட்டிருக்கிறார். அவர் மறவாதவர் ஆதலால் பிறப்பிறப்பு என்னும் பிராந்தியும் இல்லாதவர்.

மறவாதவன் என்ற சொல்லின் உடன்பாட்டு வடிவம் நினைபவன் என்பது. என்றும் மறவாதவன் என்பது இடையறாது நினைபவன் என்பதையே குறிக்கும். நினைப்பவன் முதல் நிலை, மறவாதவன் அதனை நிழல்போல் தொடரும் அடுத்த படியான நிலை. நினைபவன் மூலஸ்தானம் எனின் மறவாதவன்

# நற்சிந்தனை

## உன் நினைவல்லால் இல்லை

இராகம் - காபி                    தாளம் - ஆதி

**பல்லவி**

உன்நினை வல்லால் இல்லை
உயிர்த்துணை வோனே - உம்பர் கோனே

**அநுபல்லவி**

அன்னைபிதாக் குருநீயே
அண்டினேன் வன்மமேனோ - வினைதானோ (உன்நினை)

**சரணங்கள்**

பொன்னம் பலவாணனே
புலவர்தம் பெருமானே
கன்னலே கட்டித்தேனே
கனிரசமே யெம்மானே (உன்நினை) 1

என்னகச் சோதியே
இனியுன் பணிகதியே
இன்பசா கரமோன
மெனும்வடிவே யென்கோனே (உன்நினை) 2

புன்னெறி செல்லும்பொல்லாப்
புந்தியை வென்றுமேலாம்
நன்னெறி செல்லவைத்து
நமக்கருள்தா எங்கோனே (உன்நிநை) 3

உரையற்ற வூமர்போலாய்
உள்ளமு வந்துமேலாம்
தரைதனில் யோகசுவாமி
தான்கடைத் தேற, ஈடேற (உன்நினை) 4

அதனைத் திறந்து காட்டும் வாயிற்கதவு. சுவாமிகள் இடையறாது நினைந்திருப்பவர் என்பதை அவரது அனுபவவாக்குகளாக வந்த பாடல்கள் சில தெளிவாகக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்றின் பல்லவி

'உன் நினைவல்லால் இல்லை
உயிர்த்துணைவோனே'

என்பது

சுவாமிகளுக்குத் தமது உயிர்த்துணைவனின் நினை வொன்றேயுளது அந்நினைவைத்தவிர்த்துப் பிறிதொரு நினைவுமில்லை. உயிர்த்துணைவனான அவன் அகச்சோதியாக அகத்துள் ஒளிர்ந்து கொண்டிருக் கின்றான். அந்த அகச்சோதி ஒளிக்குள்ளே மூழ்கி அதனையே தித்திக்கத் தித்திக்க நினைந்திருப்பதில் திளைத்திருக்கும் அவருக்கு அயல் நினைவுகள் எவ்வாறு எழும்? உயிர்துணைவன் உள்ளே இன்பசாகரமோன வடிவாக உள்ளான். அவனையே நினைந்து நினைத்து தானும் அந்த இன்பசாகர மோனவடிவாகப் பரிணமித்து நிற்பதினும் உயர்ந்த நிலை பிறிதுளதோ? உன் நினைவல்லால் இல்லை என்ற பல்லவியைத் தொடர்ந்து வரும் சரணங்களிலொன்று இதனை இனிதாய் இசைக்கிறது.

"என்னகச் சோதியே இனி உன் பணிகதியே
இன்ப சாகரமோன மெனும் வடிவே எம்மானே"

இடையறாத இன்பநினைவில் மூழ்கி நிறைவுற் றிருப்பதே நன்மோன நிறைவு போலும், கரைகாணா இன்பக்கடலாடுபவனின் இடையறாத நினைவுகளின் திரட்சியே நன்மோனம் எனத் தெரிகிறது. இடையறாத ஒளித்துளிகளின் நிறைவானது மின்விளக்கில் ஒரே ஒளிச் சோதியாய்த் தெரிவது போல இடையறாத இன்ப நினைவுகளின் நிறைவு நன்மோனம் என நாம் விளங்கிக் கொள்ளலாம். செல்லப்பதேசிகர், சுவாமிகள் என்போர் இத்தகைய இன்பசாகர மோனத்திலேயே திளைத்தனர். இவ்வாறான இன்பநினைவையே சுவாமிகள் நற்சிந்தனை என வழங்கினர் எனத் தெரிகிறது.

தமது இந்த நினைவையும், இந்த நினைவைப் பிறரும் அனுபவிப்பதற்குரிய உபாயத்தையுமே சுவாமிகள் நற்சிந்தனை என முடிசூடிய தமது திருவாய் மொழிகள் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றனர்.

சுவாமிகள் கூறும் இந்த நன்மோன நினைவிற் பொருந்தும் நற்சிந்தனை மன உலகில் நிகழ்வ தொன்றல்ல. மனம் தாவித்தாவிச் செல்லும் இயல்பானது. அது ஒன்றையே நினைந்திருக்கும் இயல்பிலாதது. ஆனால் சுவாமிகளின் நற்சிந்தனையோ அகச்சோதி ஒன்றையே பற்றி நினைவது. மனம் நினைவதுபோலவே மறப்பதையும் இயல்பாக உடையது. சுவாமிகளின் நற்சிந்தனையோ நினைப்பதும் மறப்பதும் கடந்து பேருணர்வை நினைவுபடுத்த வேண்டிய தேவையில்லாத நினைவு. மன அவத்தை, சுழுத்தி அவத்தை என்பவற்றைக் கடந்த துரிய நிலையைச் சார்ந்த நினைவாயிருந்து பின்னர் அந்த நினைவின் நிறைவில் துரியாதீதத்தில் பொருந்தும் உறங்காத பேருணர்வு நிலையாகும். இந்த நலமான சிந்தனையை அவர் ஒருபோதும் மறப்பதில்லை.

மறவாதவன் என்ற சுவாமிகளது கையெழுத்து ஒரு புறம் உட்கதவைத் திறந்து அவர் நற்சிந்தனை எனும் நல்லமுதருந்தி இன்பசாகரமோன வடிவாக இருப்பதைக் காட்டுகிறது. மறுபுறம் அயல் நினைவுகளால் தீண்டப் படாதிருக்கும் ஏகாந்த நிலையைக் காட்டுகின்றது. நம் போன்ற சாமானியர்கள் கடலலைப்போல் வரும் அயல் நினைவுகளில் மூழ்கி நமது இயல்பான நற்சிந்தனையை மறந்துவிட்டோம். சுவாமிகளோ மேக மூட்டங்களால் மறைக்கப்படாது ஒளிரும் கதிரொளியைக் கண்டுகொண்டிருப்பதுபோல அயல் நினைவுகளுக்கு அப்பாலிருக்கும் அகச்சோதியை நினைந்திருக்கும் இன்பப் பெருக்கினாலே கணமும் மறவாதிருக்கிறார்.

சுவாமிகள் தமது அருள்மொழி ஒன்றிலே
"நாங்கள் செய்வதெல்லாம் உலக நலனுக்காகவே.
எங்களுக்கு மண்ணாதி பூதமில்லை"

என அருளியிருக்கிறார். ஆகவே 'மறவாதவன்' என்றும், உன் நினைவல்லால் இல்லை" என்றும் அவர் கூறுவது நமது நலனுக்காகவே. நாமும் நற்சிந்தனை எனும் நல்லமுதருந்தி, அந்த நல்ல நினைவைக் கணமும் மறவாது சுகக் கடலில் திளைத்திருத்தல் வேண்டும் என்ற கருணைப் பெருக்கிலே அவர் அவ்வாறெல்லாம் கூறியிருக்கிறார். ஆயின் மறதியினாலே மதிமயங்கிக் கிடக்கும் ஏழையடியவர்களான எம்மால் என்ன செய்ய முடியும்? சுவாமிகளிடம் கையேந்தி நிற்பதொன்றே எம்மால் செய்யத்தக்கது.

The Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 81 (November - December 2017) Issue : 11 - 12

## NATCHINTHANAI

### LOVE THE FEET OF SIVA

Great men love the feet of Siva.
Small men do not love Siva's feet.
Love of Siva's feet will give you glory.
Love of Siva's feet is *mukti* in this life.

Love of Siva's feet eradicates bad karma.
Love of Siva's feet grants you clarity of mind.
Love of Siva's feet imbues the heart with gladness.
Love of Siva's feet is consciousness itself.

Love of Siva's feet kills all the sins you practise.
Love of Siva's feet induces Holy Grace.
Love of Siva's feet leads to the state of Siva.
Who can describe the love of Siva's feet?

The very love of Siva's feet is union with Siva.
The very love of Siva's feet is knowledge of the Lord.
The very love of Siva's feet is experience of Siva.
The very love of Siva's feet is Siva Absolute.

If you love the feet of Siva, like gold will be your body.
If you love the feet of Siva, all-conscious it will be.
If you love the feet of Siva, of the body you will be master.
If you love the feet of Siva, of Siva it will be made.

Love of Siva's feet is of triple time the knowledge.
Love of Siva's feet means the three worlds are understood.
Love of Siva's feet is to comprehend *Trimurti.*
Love of Siva's feet means the three defects are dead.

Give love to Siva's feet, then all you see will vanish.
Give love to Siva's feet, then the seer will shine forth.
Give love to Siva's feet, then the three *gunas* will perish.
Give love to Siva's feet, then there will be sweetness, in your heart.

Love the feet of Siva's, then for you there are no devas.
Love the feet of Siva, then no *jivas* will exist.
Love the feet of Siva, then there will be no sages.
For all are Siva, if you love Siva's feet.

# Thiruvasakam

## கோயிற் திருப்பதிகம்

1 மாறிநின் றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
இன்பமே என்னுடைய அன்பே.

2 அன்பினால் அடியேன் ஆவியோ டாக்கை
ஆனந்த மாய்க்கசிந் துருக
என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்
யான்இதற் கிலன்ஓர் கைம்மாறு
முன்புமாய்ப் பின்பும் முழுதுமாய்ப் பரந்த
முத்தனே முடிவிலா முதலே
தென்பெருந் துறையாய் சிவபெரு மானே
சீருடைச் சிவபுரத் தரைசே.

3 அரைசனே அன்பர்க் கடியனே னுடைய
அப்பனே ஆவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னும் அமுதத்தெண் கடலே
திருப்பெருந் துறையுறை சிவனே
உரையுணர் விறந்துநின் றுணர்வதோர் உணர்வே
யானுன்னை உரைக்குமா றுணர்த்தே.

4 உணர்ந்தமா முனிவர் உம்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி எல்லா உயிர்கட்கும் உயிரே
எனைப்பிறப் பறுக்கும்எம் மருந்தே
திணிந்ததோர் இருளில் தெளிந்ததூ வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கள்தா மில்லா இன்பமே உன்னைக்
குறிகினேற் கினியென்ன குறையே.

5 குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயுந்
திருப்பெருந் துறையுறை சிவனே
இறைவனே நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக் கேனே.

## The Sacred Decad of the Temble

1 O Supreme Splendour that rises within me welling forth as ambrosia,
Having blocked the ways of the five traitor senses that ever delude me.
Graciously show Thyself to me as Thou art
Clearest of the clear, Lord Siva, Dweller in the great holy shrine,
O Bliss transcending all states without end, O my Love!

2 With love Thy servant's body and soul melting in bliss, Sweet grace, by me not deserved, Thou didst grant. For this I have naught to give in return.
Thou that didst spread forth as all before and all after, Free One, Substance eternal,
Dweller in the great southern shrine, Lord Siva, King of the beauteous city of Siva.

3 O King, Father to me that am the servant of those that love Thee,
Light of Truth that, entering body and soul, hath melted all faults. and driven away the false darkness,
Full, waveless, clear Ocean of Ambrosia, Siva, Dweller in the great holy shrine,
O Knowledge known there where speech and knowledge are dead,
Make known unto me, how shall I speak of Thee?

4 Thou that art not to be known by the intelligence of great sages, celestials and all others,
Life of all diverse living things, Medicine that cures me of birth.
Pure Space that came forth from the dense darkness,
Siva, Dweller in the great holy shrine, 0 Bliss ineffable,
What now is lacking to me who have neared Thee?

5 Perfect Fulness, flawless Ambrosia, Mountain of endless, flaming Light,
O King that comest unto me as the Vedas and the meaning of the Vedas and didst fill my mind,
Siva that, like torrent brooking not banks, rushest into the mouth of my heart, Dweller in the great holy shrine,
Sovereign Lord, Thou has made my body thy abode.
What more can I ask Thee?

6 இரந்திரந் துருக என்மனத் துள்ளே
எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங் கமலச்சே வடியாய்
திருப்பெருந் துறையுறை சிவனே
நிரந்தஆ காயம் நீர்நிலம் தீகால்
ஆய்அவை அல்லையாய் ஆங்கே
கரந்ததோர் உருவே களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண் டின்றே.

6 O Splendour that rises in my heart as asking, asking I melt!
Thou whose lily-feet grace the crowns of celestials, Siva, Dweller in the great holy shrine,
Who art all-pervading space and water and earth and fire and air,
Who art other than they, Whose form in them is hidden,-
I rejoice, having seen Thee this day.

7 இன்றெனக் கருளி இருள்கடிந் துள்ளத்
தெழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற் றின்மை
சென்றுசென் றணுவாய்த் தேய்ந்துதேய்ந் தொன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே
ஒன்றும் நீ யல்லை அன்றியொன் றில்லை
யாருன்னை அறியகிற் பாரே.

7 This day in Thy mercy unto me Thou didst drive away the darkness and stand in my heart as the rising Sun.
Of this Thy way of rising-there being naught else but Thou,
-I thought without thought.
Nearer and nearer to Thee I drew, wearing away atom by atom, till I was One with Thee, 0 Siva,
Dweller in the great holy shrine.
Thou art not aught in the universe. Naught is there save Thou.
Who can know thee?

8 பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
பரந்ததோர் படரொளிப் பரப்பே
நீருறு தீயே நினைவதேல் அரிய
நின்மலா நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாருற வெனக்கிங் கார்அய லுள்ளார்
ஆனந்த மாக்குமென் சோதீ.

8 Thou that, sprouting as the earth and all the spheres, spreadest as matchless expanse of light,
Fire water-laden, Pure One beyond the reach of thought,
Sweetness that wells forth in the heart made beauteous by the flood of Thy grace,
Siva, Dweller in the great holy shrine,
Who here is my kin? who is not? 0 Splendour that makes me bliss!

9 சோதியாய்த் தோன்றும் உருவமே அருவாம்
ஒருவனே சொல்லுதற் கரிய
ஆதியே நடுவே அந்தமே பந்தம்
அறுக்கும் ஆனந்தமா கடலே
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாதுநீ போவதோர் வகையெனக் கருளாய்
வந்துநின் இணையடி தந்தே.

9 Form of Splendour, Formless One, ineffable Beginning, Middle and End,
Great Ocean of Bliss that destroys bondage,
Mountain of holy Grace and Goodness, Siva, Dweller in the great holy shrine.
Wherefore now quittest Thou me? Graciously provide for me, come,
Give me the refuge of Thy feet.

0 தந்ததுன் றன்னைக் கொண்டதென் றன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்
சிந்தையே கோயில் கொண்டஎம் பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங் கொண்டாய்
யான்இதற் கிலன்ஓர்கைம் மாறே.

10 It was Thyself Thou didst give and me Thou didst take. Beneficent Lord, who is the gainer?
Endless bliss have I gained. What hast Thou gained from me?
O Lord that hast made my heart Thy temple, Siva, Dweller in the great holy shrine,
O Father, Sovereign, Thou hast made my body Thy abode.
For it I have naught to give in return.

(English rendering by Sir P. Arunachalam)

# THE AMRITANUBHAVA

## CHAPTER : 7

- continue from the last issue

### Refutation of Ajnanavada

81. (To think like ths would be) to erect a meeting hall using the horns of a hare as pillars, to illuminate it with the rays of the new flowers!

82. And to enoy the festival by adorning the children of barren women with the sky flowers!

83. The desire (to search for ignorance) will be fulfilled if we can dill the measure glass of the sky with the ghee of a tortoise.

84. We have tried, in various ways, to search for ignorance. How many times should we repeat that it does not exist?

85. So I would not utter the word ignorance eve in a dream. But an idea occurs to me about it.

86. The Ultimate Reality is not such as would become the seer by seeing itself or any other object.

87. Then how is it that it presents before it the great visible world and assumes itself the function of a seer?

88. The wide world rises and is also visible to us, in the state where even the name Atman cannot get access.

89. Though ignorance is not visible yet it exists without any doubt. It is proved by inference from the visible world.

90. The moon is one. But if it appears as two in the sky, should we not think that the eye-sight is impaired?

91. The trees look fresh and green and it is not seen that they are sucking water form the source different from the ground on which they stand.

92. Still we cannot avoid inferring that their roots are certainly sucking water. So the ignorance also is known by inference from the visible world.

93. Sleep vanishes as soon as one awakes, it is not known to one who sleeps, but its existence can be inferred from the dreams.

94. So if there is the appearance of this vast world upon the Pure Substance, we can easily infer the existence of ignorance.

95. (To this we reply) How can we call this kind of knowledge ignorance? Should we call the thing that causes daylight as darkness?

96. Can it be called a collyrium (a dark thing) that makes an object look brighter and whiter than the moon?

97. We can call this world the process of ignorance if water can perform the function of fire.

98. The knowledge will be worthy to be called ignorance if the moon will be the cause of the dark night.

99. Will poison give out ambrosia with great love? And if it does, can it be called a poison?

100. Should we bring the flood of ignorance when all the becoming in front of us is enlightened with knowledge?

*- To be continued*

உ

சிவமயம்

| | | |
|---|---|---|
| 01. | நற்சிந்தனை 7ம் பதிப்பு | 300.00 |
| 02. | NATSINTHANAI (ENGLISH EDITION) | 400.00 |
| 03. | வள்ளியம்மை திருமணப் படலம் | 150.00 |
| 04. | நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு | 12.00 |
| 05. | *யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ம் பதிப்பு) | 350.00 |
| 06. | என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள் | 100.00 |
| 07. | நமசிவாய மாலை | 35.00 |
| 08. | தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு) | 35.00 |
| 09. | யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு) | 200.00 |
| 10. | சிவத் தியான மாலை (உரையுடன்) | 20.00 |
| 11. | தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும் | 200.00 |
| 12. | தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்) | 80.00 |
| 13. | சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 4ம் பதிப்பு) | 250.00 |
| 14. | KANDHA PURAANAM | 400.00 |
| 15. | YOGUSWAMI TREASURED MEMORIES | 300.00 |
| 16. | YOGASWAMI LIFE AND SPRRITUAL GUIDANCE | 500.00 |
| 17. | HOMEAGE TO YOGASWAMY | 10.00 |
| 18. | சண்முக கவசம் | 25.00 |
| 19. | முருகன் திருப்பாடற் திரட்டு | 50.00 |
| 20. | ஈழத்துத் திருப்புகழ் | 50.00 |
| 21. | சர்வஞானோத்திர ஆகம ஞானபாதவசனம் | 50.00 |
| 22. | திருவாசகம் | 220.00 |
| 23. | சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு | |
| | ஆண்டுச் சந்தா a) உள்நாடு | 600.00 |
| | b) வெளிநாடு US $ | 30.00 |

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு.க. சிவராசா,
5/2, விஷ்னு ரவர்
82 W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

திரு. சி. மணிவாசகன்,
20 A 2/3, ஸ்ரேசன் வீதி,
கொழும்பு –06
(சனிக்கிழமைகளில் மாத்திரம்)
0112594462

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் விலாசமும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of
Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.


Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. Q.D / 186 / NEWS / 2017

a) Printer : Harikanan Printers
K.K.S.Road,
Jaffna. 021 222 2717 / 18

b) Publisher : M. Thilakaratnam

c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T.P.: 021 - 2222799

Date of Publication : 01.11 .2017

Editor : S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
Tel: 065 - 2240272


If undelivered please return to:
The Manager , "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.